# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 5 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 2**
**FEBRUARY 2021 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**


Mob.: No. **9894261333** இந்த எண். **SMS** உபயோகத்துக்காக மட்டும்

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




கர்த்தருக்குள் அன்பானவர்களே !

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். கொரோனா தொற்றிலிருந்து சுகம்பெற்று இந்த நிமிடம் வரை ஆரோக்கியத்தோடும், புதிய பெலத்தோடும் என்னை வாழவைத்த கர்த்தரை துதிக்கிறேன்.

கடந்த 11 மாதங்கள் ஜாமக்காரன் வெளி நாடுகளுக்கு அனுப்பப்படாததால் வெளிநாட்டில் உள்ள வாசகர்கள் நான் பத்திரிகை வெளியிடுவதையே நிறுத்திவிட்டேன் என்று பிழையாக கருதி விட்டார்கள். ஒரு சிலர் நான் கெரோனா தொற்றில் பாதிக்கப்பட்டு **இறந்துவிட்டேன்** என்றும் நினைத்து தொலைபேசி மூலம் என் மனைவியிடம் விசாரிக்க தொடங்கிவிட்டனர். இவ்விதம் பலவாராக நினைப்பது இயல்புதான். அது பிழையில்லை.

இந்த ஒரு வருட இடைவெளியில் website வழியாக என் பத்திரிக்கை ஜாமக்காரன் வழமையாக வெளியிடப்படுகிறது என்பதை பெரும்பான்மை வாசகர்கள் அறிந்து அவ்விவரத்தை தங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் அறிவித்து அவர்களும் **கம்ப்யூட்டர்** மூலமாக **ஜாமக்காரனை** சாம் மொபைல் மூலமாகவும் Websiteல் தொடர்ந்து வாசித்து பயன் அடைந்தனர். அதற்காக தேவனை துதிக்கிறேன்.

**FEBRUARY - 2021**

**இந்தியா, வெளிநாட்டு** வாசகர்கள் எவரானாலும் website மூலமாக ஜாமக்காரனை வாசித்து பயன் பெறுங்கள். **www.jamakaran.com** இந்த **வெப்சைட்டை** பயன்படுத்தி ஜாமக்காரனை வாசிக்கலாம் என்று அறிவிக்கிறேன்.

**ஜாமக்காரன்** கிடைத்தாலும், கிடைக்காமல்போனாலும் ஜாமக்காரன் ஊழியத்தை பணத்திலும், ஜெபத்தினாலும் தொடர்ந்து தாங்கிவந்த அனைத்து ஜாமக்காரன் பங்காளர்களுக்கும் வாழ்த்துதல் கூறுகிறேன்.

## கன்வென்ஷன் பற்றிய விவரம்

2021 வருடம் முழுவதும் 81 வயதில் உள்ள நான் நல்ல ஆரோக்கியத்தோடு இருந்தாலும், **கொரோனா கிருமி** பரவல் புது ரூபத்தில் மிக அதிகமாக ஆட்கள் மூலமாகவும், காற்றின் மூலமாகவும் பரவுவதால் **வயது முதிர்ந்தோர்,** வீட்டைவிட்டு வெளியே போவது நல்லதல்ல என்று **தொற்றுவியாதி சிறப்பு டாக்டர்கள்** ஆலோசனை கொடுத்துள்ளனர்.

ஆகவே இந்தியாவில் – வெளிநாட்டில் உள்ள **அனைத்து சபை ஆயர்களும்,** பாஸ்டர்களுக்கும் பிஷப்மாருக்கும் தயவாய் வேண்டிக்கொள்வது என்னவென்றால் **2022 மார்ச்** வரை என்னை கன்வென்ஷனுக்கு அழைக்க வேண்டாம் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கும் வீட்டில் அடைந்து கிடப்பது ஒருவித சோர்வை உண்டாக்குகிறது. உங்கள் யாவரையும் நேரில் காணவும் உங்கள் குடும்பத்துத்தோடும் சபையினரோடும் பேசி ஆவிக்குறிய விஷயங்களையும் ஆலோசனைகளையும் பகிர்ந்துகொண்டு உங்களோடு **இணைந்து ஜெபிக்க** மிக ஆவலாய் இருக்கிறேன்.

இந்த **கொரோனா தொற்றின்** சூழ்நிலை எப்போது முடிவுக்கு வருமோ என்று மிகவும் ஆவலோடு ஜெபித்து காத்திருக்கிறேன். ஜெபியுங்கள், நானும் உங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கறேன்.

- ☐ ஒவ்வொரு நாளும் 24 மணி நேரமும் வெளியில் எங்கும் போகாமல் வீட்டிலேயே இருக்கிறேன். கலியாண விசேஷயங்களுக்கோ, மரண வீட்டுக்கோ வேறு எதற்காகவும் நான் **வீட்டைவிட்டு வெளியே செல்லாமல்** இருப்பதால் **இரவு** 11 மணிவரைக்கும் **மதியம்** 2 மணியிலிருந்து **மாலை** 5 மணி வரை என் **ஓய்வு நேரம்** போக மீதி நேரங்களில் எப்போதும் என்னோடு நீங்கள் **தொலைபேசியில்** 0427-2387499, 0427- 2386464 Cell : **09894261333** மூலமாக என்னோடு தொடர்பு கொள்ளலாம். நானும் உங்களோடு தொலைபேசி வழியாக நானே உங்களுக்காக ஜெபமும் செய்வேன். **என் மனைவியுடனும்** நீங:கள் தொடர்பு கொள்ளலாம். அவரும் உங்களுக்காக ஜெபிப்பார்.

ஒவ்வொரு மாதமும் ஜாமக்காரன் பத்திரிக்கை தாமதமாகவே உங்கள் கையில் கிடைக்கும், பொறுத்துக்கொள்ளவும்.

கர்த்தருக்கு சித்தமானால் அடுத்த மாதம் (மார்சி) மறுபடியும் ஜாமக்காரன் மூலமாய் உங்களைச் சந்திக்கிறேன். தொடர்ந்து உங்களுக்காக ஜெபிப்பேன். **Dr. Pushparaj**



# அற்புதமனிதனின் ஆவிக்குரிய மரணம்



Bro. **J.J. Rathnakumar,** M.B.A., Bro. **J.J. Rathnakumar,** M.B.A.,

MUF, MUT என்ற இரண்டு **சமூக தொண்டு** ஸ்தாபனத்தின் ஸ்தாபகர் திரு. **J.J. இரத்தினகுமார்** அவர்கள் ஜனவரி 18ம் தேதி 2021 அன்று ஆண்டவரின் திட்டத்தை பூர்ணமாய் நிறைவேற்றி தன் ஓட்டத்தை முடித்தார். சகோதரன் அவர்களின் மனைவி Mrs.சாந்தி, பிள்ளைகள் **பிரியா, ஜெய்** ஆகியவர்களின் குடும்பங்களுக்கு கர்த்தர் தாமே ஆறுதல் அளிப்பாராக.

சாதாரணமாக நம்மில் பலர் பலவித மிஷனரி ஸ்தாபனங்களுக்கு காணிக்கை அனுப்பி மிஷனரிகளையும், அவர்களின் குடும்பங்களையும் தாங்குவோம். மிஷனரிகளுக்காகவும், பணிதளங்களுக்காகவும் விசேஷ ஜெபக்குழுக்களாக இணைந்து ஜெபிப்போம். மிஷனரிகளை நினைத்து தினசரி பாரத்தோடு ஜெபிப்போம்.

ஆனால் சகோ. **J.J. இரத்தினகுமார்** அவர்களுக்கு கர்த்தர் கொடுத்த பாரம் பெரும் வித்தியாசமானதாகும்.

சகோதரன் அவர்கள் 1979ம் ஆண்டு Madura Coats என்ற பன்னாட்டு நூற்பு ஆலையில் உயர் அதிகாரியாக பெரும் தொகையை சம்பளமாக பெற்று நல்ல வசதியுடன் வாழ்ந்தவர். ஒரு நாள் இரட்சிப்பின் அனுபவம் பெற்று ஊழிய வாஞ்ஜை உண்டானது. Dr.Rev.தியோடர் வில்லியம்ஸ் அவர்களின் அறிமுகம் கிடைத்தது. அண்ணாரின் செய்தியால் கவரப்பட்டு Dr. Rev. தியோடர் வில்லியம்ஸ் அவர்களை நேரில் சந்தித்தார். அவர் IEM மிஷனரி பணிக்கு அவரை அறிமுகப்படுத்தினார். அவரும் **IEM மிஷனரி** ஊழியத்தில் **வட்டார செயலாராக** பணியாற்றினார். அதே சமயம் வட இந்திய மிஷனரி பணி தளங்களுக்கும் சென்று பார்வையிட்டார்.

மிஷனரிகளுக்கு விசேஷ பயிற்சி கொடுத்து உண்மையான மிஷனரியாக உருவாக்கும்பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. 23 வருடங்கள் அந்த பணியை நல்ல பாரத்தோடும் **அற்பணிப்போடும்** அதை நிறைவேற்றினார். அப்போது தான் கர்த்தர் தனக்கு என்று நியமித்தது வித்தியாசமான **சமூக தொண்டு ஊழியம் என்பதை** புரிந்து கொண்டு

கர்த்தர் தனக்கு நியமித்த (Mission) ஊழிய **நியமன திட்டம்** இதுதான் என்பதை புரிந்து கொண்டு கர்த்தர் தன்னை **அபிஷேகித்து** கொடுத்த அந்த அற்புதமான வேலையை தன் மரணம் வரை மிக அருமையாக நிறைவேற்றினார்.

பொதுவாக மிஷனரி ஊழியங்களை குறித்து இரட்சிக்கப்பட்ட பெரும்பாலானவர்கள் பாரப்படுவார்கள். மிஷனரிகள் ஊழியம் செய்யும் வட இந்திய காடுகளில் அந்த மிஷனரிகள் படும் பாடுகள், வசதியற்ற குடிசை வீடுகள், பாதுகாப்பற்ற நிலை இவைகளை குறித்து கதை கதையாக ஒவ்வொரு ஊரில் நடக்கும் கிதியோன் முகாம், மிஷனரி ஊழிய ஜெப குழுக்கள் ஆகியவற்றில் மிஷனரி ஸ்தாபன பொருப்பாளர்கள், ஊழியர்கள், பிரச்சனைகளை பாடுகளை விளக்கி கூறுவார்கள்.

ஆனால் சகோ. இரத்தினகுமார் அவர்களோ அந்த மிஷனரிகள் வியாதிபட்டால் அல்லது அவர்களின் பிள்ளைகள் வியாதிபட்டால் பணிதளத்தின் அருகே உள்ள ஆஸ்பத்திரிகளில் சரியான வைத்தியம் கிடைக்காததால் டாக்டர்களின் அறிவுறுத்தலின்படி கிறிஸ்தவ ஆஸ்பத்திரியான (தமிழ்நாடு) **வெல்லூரில்** உள்ள **CMC ஆஸ்பத்திரிக்கு** அந்த நோயாளிகளை கொண்டு வருவார்கள். அப்போது அவர்கள் இரண்டுவாரம் அல்லது ஒரு மாதம் ஆஸ்பத்திரியில் தங்கி **வைத்தியம்** அல்லது **ஆப்பரேஷன்** செய்ய வேண்டிவந்தால் அந்த நோயாளியை அழைத்துவந்த கணவரோ – மனைவியோ அல்லது அவர்களுடன் வந்த குடும்பத்தினரோ ஆஸ்பத்திரியின் வெளியே உள்ள லாட்ஜ்களில்தான் தங்கவேண்டிவரும்.

ஒரு நாளைக்கு குறைந்த வாடகையாக ரூபாய் 1500ஐ கொடுக்க வேண்டிவந்தால், இரண்டு வாரம் தங்க எத்தனை ரூபாய் செலவாகும்? வைத்திய செலவுக்கு **மிஷனரி ஸ்தாபனங்கள்** உதவும் பணத் தொகை மிக மிக குறைவு. ஆஸ்பத்திரி செலவுக்காகவும், மருந்து செயலவுக்காவும் அந்த பணம் போதாது. அவர்களோடு கூட உள்ளவர்கள் சாப்பிட பணம் வேண்டும், அந்த பணத்துக்கு **ஏழை மிஷனரிகள்** என்ன செய்வார்கள்? இப்படி பிரச்சனையில் அகப்பட்ட மிஷனரிகள் சிலர் மரத்தின் கீழோ அல்லது ரயில்வே ஸ்டேஷன் வெராண்டாவிலோ படுத்து உறங்கி மறுநாள் காலை நோயாளியை பார்க்க மன வேதனையுடன் CMC ஆஸ்பத்திரி நோக்கி செல்வதை சகோதரன் அவர்கள் நேரில் கண்டார்கள்.

அப்படி பல மிஷனரிகள் வெல்லூர் CMC ஆஸ்பத்திரிக்கு வந்து அவர்கள் பட்ட பாடுகளை **வட இந்தியாவிலிருந்து** வெல்லூர் வந்த அவர்களின் கதைகளையும், உண்ண உணவின்றி தவித்த விவரங்களையும் கதை கதையாக கேட்டு அறிந்தார்கள். அப்போது சகோ. **ரத்தனகுமார்** முடிவெடுத்தார். **இதுதான் என் ஊழியம்**, இப்படிப்பட்டவர்களுக்கு என்னாலான உதவிகளை செய்ய வேண்டும் என்ற எண்ணம் உருவானது. தன் உயர்ந்த பதவியை ராஜினாமா செய்துவிட்டார். CMC ஆஸ்பத்திரிக்கு அருகே உள்ள தன் **சொந்த**

**வீட்டை** தங்க இடமின்றி தவிப்போருக்கு திறந்து கொடுத்தார். ஆனால் இவரோ **வாடகை வீட்டில்** தங்கினார். அந்த மிஷனரிகளுக்கு **தங்க அறை,** தாங்களே **சமைத்து சாப்பிட** கேஸ் அடுப்பு, **பாத்திரங்கள்** யாவும் இலவசமாக அவர்களுக்கு அளித்து எத்தனை வாரங்கள் தங்க வேண்டுமோ அத்தனை வாரங்கள் தங்கலாம், இதன் மூலம் ஓட்டல் **சாப்பாட்டு செலவு,** தங்கும் **வாடகை பணம்** சேமிக்கலாம். ஆரம்பத்தில் தங்கும் அறைக்கும், சாப்பிடும் பாத்திரம், அடுப்பு யாவுக்கும் சேர்த்து 10 ரூபாய் வாங்கினார்.

மேலும் ஆஸ்பத்திரியில் **எந்த டாக்டரிடம்** அந்த நோயாளியை காட்ட வேண்டும் என்பதற்கு **தானே அவர்களை அழைத்துக்கொண்டு நேரில் சென்று** அல்லது தன் உதவியாளரை அனுப்பி அந்த குறிப்பிட்ட டாக்டரிடம் அறிமுகம் செய்து வைப்பார். சுகமானபின், வட இந்தியா **பணிதளத்துக்கு** திரும்பி போக **பணம் இல்லாதவர்களுக்கு** இரயில் **டிக்கட் வாங்கி கொடுத்து** அனுப்புவார். ஆப்பரேஷன் செய்ய வேண்டிவந்தால் **அந்த பெரும் தொகைக்கு** தனக்கு தெரிந்த விசுவாசிகளிடம் கூறி பணம் சேகரித்து ஆப்பரேஷன் செய்ய உதவுவார். **விளம்பரம் இல்லா** இந்த அற்புதமான ஊழிய உதவிகளை இவர் செய்கிறார் என்பதை பலர் வாய்மொழியாக கேள்விப்பட்டவர்கள் இவர் கேட்காமலே இவர் பெயருக்கு பணம் அனுப்ப தொடங்கினார்கள் .

பணம் பெருக பெருக உடனே அரசாங்க சட்ட திட்டங்களுக்கேற்ப தான் செய்யும் சமூகத் தொண்டை உதவி **ஸ்தாபனமாக** (Trust) அரசாங்கத்தில் பதிவு செய்து தங்கும் அறைகளின் எண்ணிக்கையை அதிகமாக்கி அந்த ஸ்தாபனத்துக்கு (MUT) Missionaries Uphold Trust என்றும் மிஷனரிகளுக்கான மற்ற தேவைகளை ஆவிக்குரிய ஆலோசனைகளை கொடுக்க MUF (Missioneries Uphold Families) என்ற பெயரில் **சமூக சேவை மையத்தை** தொடங்கினார்.

அது ஆலமரம் போல் வளர்ந்தது. தமிழ்நாட்டில் திண்டுக்கல் என்ற ஊருக்கும் பழனி என்ற ஊருக்கும் இடையே **ஒட்டன் சத்திரம்** என்ற ஊரில் CMC போலவே மிகப்பெரிய கிறிஸ்தவ ஆஸ்பத்திரி உண்டு, அங்கும் நிறைய மிஷனரிகள் வைத்தியம் செய்ய வருகிறார்கள் என்பதை அறித்து **வெல்லூரில்** உள்ளதை போலவே ஒட்டன்சத்திரத்திலும் **தங்கும் விடுதி** முதல் **சாப்பாட்டு வசதியும்** செய்து கொடுத்து உதவினார். மிஷனரிகள் மரித்து போனால் அந்த குடும்பத்துக்கு உதவி தொகை மாதம் மாதம் கொடுத்து உதவும் ஒரு திட்டம் ஏற்பாடு செய்தார்.

ஆஸ்பத்திரியில் மிஷனரி மரித்துபோனால் அவர்களின் சொந்த ஊருக்கு சரீரத்தை கொண்டு செல்ல ஆம்புலன்ஸ் உதவியும் செய்தார். சில காலத்துக்குப்பின் **அனைத்து மிஷனரி ஸ்தாபனங்களையும்,** ஊழியர்களையும் ஒருங்கினைத்த ஒரு அமைப்பை உருவாக்கினார். அதில் நான் தொடங்கி **Dr முதளிதர்.** M.D அவர்கள் பொறுப்பெடுத்து நடத்தும் Tribal Mission போன்று IEM, FMPB, BYM போன்ற பல ஸ்தாபனங்கள் ஒருங்கிணைந்து

வியாதிப்பட்ட மிஷனரிகளை தாங்கும் திட்டத்தை உருவாக்கினார். **மிஷனரி குடும்பம்** மருத்துவ சிகிச்சை பெறவும் **பெரும் தொகையில்** செய்யப்படும் இருதய ஆப்ரேஷன், **கிட்னி** ஆபரேசன் போன்றவற்றுக்கு தேவையான உதவிகளை பெற்று தருதல் **மிஷனரி பிள்ளைகளுக்கான உயர் படிப்புக்கு** உதவுதல் போன்ற ஏராளமான உதவி திட்டங்கள் சகோதரன் உள்ளத்தில் உருவாக அதற்கு **ஆவியானவர் துணைநிற்க** அந்த ஏற்பாடுகள் சிறப்பாக நடந்துக் கொண்டிருக்கிறது. இன்று ஆயிரக்கான மிஷனிரிகள் நோயின் மரண பிடியிலிருந்து காப்பாற்றப்பட சகோ. **J.J. ரத்தனகுமார்** அவர்கள்தான் காரணம் என்றால் அது மிகையாகாது. வியாதி படுக்கையில் உள்ள மிஷனரிகள் பிள்ளைமாரோ, நாடாரோ, முதலியாரோ, தலித்தோ என்றெல்லாம் வித்தியாசம் பாராமல் மிக நேர்தியாக உதவும் திட்டத்தை நிறைவேற்றினார்.

சுவிசேஷம் அறிவிப்பது மட்டும் ஊழியம் அல்ல. இப்படிப்பட்ட நற்கிரியைகள், சமூக சேவைகள் செய்யவும் நம் ஆண்டவர் நமக்கு கட்டளையிட்டிருக்கிறார். அவரும் அந்த வகையான தொண்டு செய்து மக்களை காப்பாற்றினார்.

**பிதா** இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்துக்கு அனுப்பும்போது இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றவும் அனுப்பினார் என்று வேதம் கூறுகிறது. லூக்கா. 4:18 கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார். தரித்திரர்க்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி என்னை **அபிஷேகம் பண்ணினார்.** இருதயம் **நருங்குண்டவர்களைக் குணமாக்கவும்,** சிறைப்பட்டவர்களுக்கு **விடுதலையையும்** குருடருக்கு **பார்வையையும்** பிரசித்தப்படுத்தவும் நொருங்குண்டவர்கைள விடுதலையாக்கவும் (பிதா) என்னை அனுப்பினார் என்று இயேசுவே கூறுகிறார்.

இந்த வசனத்தில் **அபிஷேகம்** பண்ணினார் என்பதற்கு பரிசுத்த ஆவியை குறிப்பிடவில்லை. அபிஷேகம் என்றால் **நியமிக்கப்படுவது** என்று அர்த்தமாகும்.

அப்படியே சகோ. **J.J இரத்தினகுமார்** அவர்களையும் சுவிசேஷம் அறிவிக்கும் மிஷனரி ஊழியத்திலிருந்து பிரித்தெடுத்து இப்படி **வியாதியால் பாதிக்கப்பட்ட** மிஷனரிகளையும் அவர்கள் **தேவைகளையும்** சந்திக்க கர்த்தர் **இரத்தினகுமார்** அவர்களை **அபிஷேகம்** செய்து உபயோகித்தார். **கடைசியாக ஒட்டன் சத்திரத்தில்** அவரின் கடைசி மூச்சுவரை இத்தகைய விதவிதமான சேவைகளை செய்து **தன் மரணத்துக்கு பின்பும்** இந்த தொண்டு நிறுவனம் தொடர்ந்து நடக்கும்படியான **சகல ஏற்பாடுகளையும்** செய்து முடித்த திருப்தியுடன் தன் ஆவியை கர்த்தரிடம் ஒப்புவித்தார்.

இவரின் இத்தகைய சேவைகளை **கேரளா** (மலையாள) டாக்டர்கள், நர்ஸ்மார்கள் கேள்விப்பட்டு **தங்கள் சபை** ஆயர்களிடம்கூற உடனே கேரள மாநில **மார்தோமா சபை** அற்புதமான ஏற்பாடுகளை **வெல்லூரில்** செயல்படுத்தியது.

அவர்களை தொடர்ந்து **மத்திய கேரள** CSI டையோசிஸ் (மலையாள CSI சபைகளும்) வியாதயஸ்தருக்காகவும் அவர்களுக்கு துணையாக வந்தவர்களுக்காகவும் **தங்கும்** விடுதிகளையும் அவர்களுக்கு இரண்டு வேளை **சாப்பாடு** வசதிகளையும் அளித்து தங்களை இப்படிப்பட்ட சமூக சேவையில் ஈடுபடுத்திக்கொண்டது பாராட்டத்தக்கது. இந்த மலையாள கிறிஸ்தவர்கள் தங்கள் கேரள மாநிலத்தவருக்கு தான் முன்னுரிமை கொடுக்கிறார்கள். மற்ற பாஷை பேசுபவர்கள் குறிப்பாக மிஷனரிகளுக்கு **முக்கியத்துவம்** கொடுப்பதாக நான் கேள்விபடவில்லை.

இவர்கள் யாவருக்கும் முன்னோடியாக சகோ **J.J இரத்தினகுமார்** அவர்களைத்தான் கர்த்தர் **அபிஷேகித்து** தெரிந்தெடுத்தார்.

தன் மரணத்துக்கு பின்னும் இந்த வகையான பல தொண்டுகளையும், சேவைகளையும் தொடர்ந்து நடைபெற தூரப்பார்வை திட்டத்தோடு **நிரந்தரமான பல ஏற்பாடுகளை** தன் மரணத்துக்குமுன் திட்டமிட்டு மிக அருமையாக ஏற்பாடுகளை செய்து முடித்துவிட்டார்.

**ஜாமக்காரன் :** இதை எழுதும் போது எனக்கு ஒரு **ஆதங்கம்** என்னவென்றால் சகோதரன் **J.J இரத்தனகுமார்** அவர்களை **Dr. தியோடர் வில்லியம்ஸ்** அவர்கள்தான் **மிஷனரி** பணிக்கு அறிமுகப்படுத்தி, அதனால் அவர் மிக அதிகமான வருடங்களை **IEM மிஷனரி** ஸ்தாபனத்துக்காகத்தான் உழைத்தார் என்றாலும் **FMPB நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மிஷனரி** ஊழியங்கள் மேலும், **மிஷனரிகள்** மேலும் சகோ. **J.J இரத்தனகுமார்** அவர்களுக்கு தனி பாசமும் **அனுதாபமும்** கொண்டதால் மற்ற எந்த **மிஷனரி ஸ்தாபனத்தைவிட** FMPB **மிஷனரிகள்** தான் **(MUT மூலமாக) சகோ. J.J இரத்தனகுமார்** மூலமாக மிக மிக அதிக **நன்மைகளை பெற்றனர்.** ஆகவே FMPB, MUT ஸ்தாபனத்துக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது.

FMPB மிஷனரி ஸ்தாபனம் வியாதிப்பட்ட மிஷனரிகளுக்கு அவர்களின் குடும்பத்துக்கோ அவர்கள் ஸ்தாபன சட்டப்படி வைத்திய செலவுக்கென்று ஒரு **குறிப்பிட்ட தொகை** மட்டும் கொடுக்கும். இது எல்லா மிஷனரி ஸ்தாபனங்களும் இந்த முறையைத்தான் பின்பற்றுகின்றன. கூடுதலான வைத்திய செலவு, ஆப்பரேஷன் செலவு தங்கும் செலவு இவைகளை மிஷனரிகளே தங்கள் முயற்சியால் தங்களுக்கு தெரிந்த விசுவாசிகளிடம் அறிவித்து பச்சையாக கூறினால் பிச்சையாக பணம் பெற்று தங்கள் வைத்திய செலவை சமாளிக்கிறார்கள்.

நான் கேள்விப்பட்ட வகையில் FMPB ஸ்தாபனத்தை சேர்ந்த சுமார் 600 மிஷனரிகள் அவர்களின் பிள்ளைகள், மனைவி ஆகியவர்களின் **வைத்திய செலவு** அல்லாது **சோப்பு** முதல் தங்கும் இடத்துக்கும் ஆஸ்பத்திரிக்கும் போகவர **டவுன் பஸ்** செலவைக்கூட சகோ. ரத்தினகுமார் கொடுத்துள்ளார். ஸ்தாபனம் அனுமதித்த தொகைக்குமேல் **பல்வேறு**

**செலவுகளுக்கு** பல ஆயிரங்கள் கொடுத்து அந்த மிஷனரிகளை சுகப்படுத்தி அனுப்பினால் அந்த **செலவு கணக்கு** இது நாள் வரை FMPB அலுவலகத்துக்கு சகோ. **ரத்தினகுமார்** அறிவிக்க விரும்பவில்லை.

சகோ. ரத்தினகுமார் செலவழித்த பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை இவர்களுக்காக செலவு செய்ததை அந்த நன்மைகளை அனுபவித்த அந்த மிஷனரிகளும், சகோ. ரத்தினகுமார் பணம் கொடுத்து உதவிய விவரங்களை தங்கள் FMPB ஸ்தாபனத்துக்கும் அறிவிக்கவில்லை, அறிவித்தாலும் பிரயோஜனமில்லை என்று அவர்களுக்கு தெரியும். FMPB ஸ்தாபனம் அறியாது FMPB மிஷனரிகள் **மனநோயினால்** மாதக்கணக்கில் **பாகாயம் CMCயில் தங்கினவர்களுக்கு** செலவழித்த பணம் மிக அதிகம். இப்படி பார்த்து பார்த்து கேட்டுக் கேட்டுக் FMPBயின் பல மிஷனரிகளை காப்பாற்றி சுகத்தோடு பணிதளத்துக்கு அனுப்பிவைத்தார் சகோ. J.J இரத்தனகுமார்.

- ஆனால் சகோ. J.J **இரத்தனகுமார்** அவர்களின் **மரண அறிவிப்பினை** FMPB ஸ்தானத்தினர் தங்கள் **அறைகூவல்** பத்திரிகையில் ஒரு மூலையில் **ஒரு பெட்டி செய்தியாக** எழுதியது **என் மனதை** மிகவும் உருத்தியது. குறைந்தபட்சம் அவர் **போட்டோவை** வெளியிட்டு **அவரை கவுரவித்து** தங்கள் **நன்றியை** வெளிப்படுத்தியிருக்கலாம். ஒருவேளை அவசரமாக மரண செய்தியை வெளியிட நேர்ந்ததால் அவரின் **புகைப்படம்** வெளியிட அல்லது அவர் FMPBக்கு செய்த உதவியை விவரமாக அறிவிக்க அறைகூவல் **பத்திரிகையில் இடமில்லாமல்** போயிருக்கலாம்.

ஆனால் அதே சமயம் FMPBயில் **முதல் மிஷனரிகளாக** சென்ற **நானும்** சகோ. **ஹாரிஸ் ஹில்டன்** ஆகிய எங்களோடு **எங்களின் உதவிக்காக** அனுப்பப்பட்ட **சகோ. ஏசா அவர்களின்** மரண அறிவிப்புக்கு **பெரிய புகைப்படம்** வெளியிட்டார்கள். அவரைப்பற்றி குறிப்பிட்டு சொல்லும்படியான சிறப்பு செய்தி எதுவும் இல்லாத விஷயத்துக்கு அறைகூவலில் மூன்று நீண்ட பக்கங்களை செலவிட்டு விளம்பரப்படுத்தியுள்ளார்கள். **மலையாள** மொழி பேசும் மக்களுக்கு மலையாள பாஷையில் வெளியிட்ட **அறைகூவலில் ஏ**சா அவர்களைப் பற்றி அறிவித்தது பிரயோஜனமில்லை. ஆனால் அவருக்கு 3 பக்க செய்தியில் விளம்பரப்படுத்தினார்கள்.

நம்முடைய FMPBயின் பெரும்பாலான மிஷனரிகள் சகோ. J.J. இரத்தின குமாரிடமிருந்து பெற்றுக்கொண்ட **நன்மைகள் ஏராளம்,** அவர்களுக்காக **லட்சக்கணக்கில்** அவர் செலவழித்த பணம் ஏராளம். FMPB சம்பந்தபட்டவர்கள் தங்கள் **மிஷனரிகளிடம்** பண விவரங்களை கேட்டாவது தெரிந்திருக்கலாம். சகோ. ரத்தினகுமார் அவர்களின் மரணத்தை பற்றி தமிழ் அறைகூவலில் **பெட்டிசெய்தியாக** வெளியிட்டது. மலையாள பாஷை **அறை கூவலில்** அந்த அறிவிப்பு கூட வெளிவரவில்லை.

அப்படி சகோ. ரத்தினகுமார் அவர்களின் மரன விவரத்தையும் அவர் தொண்டினையும் குறித்து **அறை கூவலில்** வெளியிடவில்லை என்பதை குறித்து நான் ஏன் ஆதங்கப்படுகிறேன் என்றால் அவர் மிஷனரிகளுக்காகசெய்த ஏராளமான உதவிகளைப்பற்றி வாசிப்பவர்களுக்கு இப்படிப்பட்ட **சமூக சேவை** மூலமாகவும் தாங்களும் ஆண்டவருக்கு ஊழியம் செய்யலாம் என்ற எண்ணம் உண்டாகுமே! அதை நினைத்துதான் வேதனைப்பட்டேன்.

அரேபியா, அமெரிக்கா, ஐரோப்பா ராஜ்யங்களில் உள்ள இந்தியர்கள் இப்படிப்பட்ட **உதவி ஸ்தாபனங்களை** இந்தியாவின் பல்வேறு இடத்தில் ஆரம்பிக்கலாமே! சகோ. J.J. இரத்தனகுமார் வட இந்தியாவிலிருந்து 3000 மைல் பிரயானம் செய்து மிஷனரிகள் வெல்லூர் CMC ஆஸ்பத்திரிக்கு வருவதற்கு பதில் **வட இந்தியாவிலேயே** MUT ஸ்தாபனத்தை விரிவாக்க மிக **அற்புதமான திட்டம் தயார் செய்து** அது முடிவுரும் நிலையில்தான் அவர் மரித்துப்போனார்.

பத்திரிகையில் இப்படிப்பட்டவர்களின் **விளம்பரம் இல்லாத சேவைகளை** குறித்து விவரித்து எழுதினால் எத்தனைபேர் அப்படிப்பட்ட சேவைகளை தாங்களும் செய்ய பணத்தோடு முன் வருவார்கள் என்பதை நினைத்துப்பாருங்கள்.

FMPB ஸ்தாபனம் SCAN என்ற சகோதரி ஸ்தாபனம் மூலம் மிஷனரிகளின் இதர தேவைகளை சந்திப்பதற்காகத்தான் ஏற்படுத்தினார்கள்.

இப்படிப்பட்ட சமூக சேவைகளை இந்து தீவிரவாதிகள் கண்டு அதைப்போலவே இவர்களும் ராமகிருஷ்ணா மிஷன் என்ற பெயரில் ஒரு அமைப்பை துவக்கி மிக வெற்றிகரமாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இயேசுவின் அன்பை அவர்கள் செயல் மூலமாக காட்டமுடியவில்லை.

சகோ. **J.J இரத்தனகுமார்** அவர்களுக்காவும் MUF, MUT ஸ்தாபனத்துக்காகவும் சகோதரன் அவர்களின் ஸ்தாபனத்திற்கு பணம் அனுப்பி ஊக்குவித்தவர்களுக்காகவும் கர்த்தரை துதிக்கிறேன்.

அந்த ஊழியம் தொடர்ந்து வெற்றிகரமாக நடக்க வெல்லூர் ஒட்டன்சத்திரம் ஆஸ்பத்திரிக்கு வரும் ஏழை மிஷனரிகள் வியாதியிலிருந்து காப்பாற்ற MUF & MUTஸ்தாபனங்களுக்கு கிடைக்கும் பண உதவி தங்குதடையின்றி தொடர்ந்து கிடைக்கவும் கர்த்தர் அருள் புரிவாராக. அவருக்குப்பின் அந்த உதவி ஸ்தாபனத்தை தொடர்ந்து நடத்த இப்போது நியமிக்கப்பட்ட பொருப்பாளராக **J.J இரத்தனகுமாரின்** இரக்கமனமும் **மிஷனரி குடும்பங்கள்மேல்** உள்ள **அனுதாபமும்** இவர்களுக்கும் உண்டாகவும் முன்பைவிட இந்த ஸ்தாபனங்கள் இன்னும் சிறப்பாக நடத்த திட்டமிடவும் கர்த்தர் அவர்களை ஊக்கப்படுத்தி ஆசீர்வதிப்பாராக.



# பொய்க்கு தகப்பன் பிசாசு

## ....பொய் பேசுகிறவர்கள் பிசாசின் பிள்ளைகள்

இயேசுவும் பரிசேயர்களை பார்த்து **உங்கள் தகப்பன் பிசாசு** என்றார்.

கிறிஸ்தவ ஊழியத்தில் யாரால் நாம் **இரட்சிக்கப்படவும், சுகம்பெறவும்** கர்த்தர் **கருவியாக** உபயோகிக்கிறாரோ அவர்கள்மேல் அப்படிப்பட்டவர்களிடம் **நன்றியை** காண்பிப்பது இயற்கைதான். ஆனால் அவர்கள் **உபதேசம் பொய்** என்றும் **வேத வசனத்துக்கு** விரோதமாக போதிக்கிறார் என்றும் நீங்கள் அறிந்தால் **அவரைவிட்டு விலகவேண்டும்.** அல்ல என்றால் தைரியமாக அவர்களின் தவறையும், குறைகளை அவர்களுக்கு சுட்டிக்காட்டி எச்சரித்து அவர்களை திருத்த முயலவேண்டும். அவர் மாறவில்லையானால் **அவரைவிட்டு விலக வேண்டும்.** அவரின் தவறான உபதேசத்தை பின்பற்றவேண்டாம் என்று உங்கள் நண்பர்களுக்கும் அறிவிக்க வேண்டும். நீங்கள் பத்திரிகை நடத்துகிறவர்கள் என்றால் உங்கள் பத்திரிகையில் அந்த ஊழியரின் தவறான உபதேசத்தை குறித்தும் பகிரங்கமாக சுட்டிக்காட்டி உங்கள் பங்காளர்களையும், உங்கள் வாசகர்களையும் **எச்சரித்து** அவர்களை **காப்பாற்ற வேண்டியது** உங்கள் கடமை. நாளைக்கு கர்த்தர் உங்களைத்தான் கணக்கு கேட்பார்.

ஆனால் அதேசமயம் நீங்கள் ஒரு சபையில் அங்கத்தினராக இருந்தால், உங்கள் பாஸ்டர், ஆயர், **பிரதரன் சபையாக** இருந்தால் உங்கள் சபை பொருப்பில் உள்ள **மூத்த மூப்பர்** ஆகியவர்களிடம் தவறுகளை கண்டால் அவர்களுக்கு தனிமையில் நீங்கள் சந்தித்து தவறுகளை சுட்டிக்காட்டி, அவர்களின் உபதேச தவறுகளையும் சுட்டிக்காட்டி அவர்களிடம் தனியாக பேச வேண்டும். அந்த எச்சரிப்பை அவர் **உதாசீனம்** செய்து அந்த தவறான செயலை, தவறான **உபதேசத்தை** அவர் தொடர்ந்து செயல்படுத்துவரானால் அவர்களின் ஆராதனையில் மட்டும் கலந்துக்கொண்டு அந்த சபையில் கானும் **நன்மையானதை** மட்டும் ஆத்துமாவுக்கு பிரயோஜனமானதைமட்டும் எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு நாள் வரும். ஊழியர் மாறவே மாட்டார் என்று உங்களுக்கு உறுதியானால் அப்போது **அந்த சபையைவிட்டு வெளியே வருவது** உங்கள் **ஆத்துமாவுக்கும்** உங்கள் **பிள்ளைகளுக்கும்,** சந்ததிகளுக்கும் நல்லது.



## இயேசு அழைக்கிறார் பால் தினகரனும், நாலுமாவடி மோகன் C. லாசரஸ்சும்



கடந்த 2021 ஜனவரி மாதம் **இயேசு அழைக்கிறார்** நிர்வாகி **Dr. பால் தினகரன்** நிர்வகிக்கும் கோயமுத்தூர் **காருண்யா** கல்லூரி முதல் சென்னையில் உள்ள **இயேசு அழைக்கிறார்** ஊழிய அலுவலகம், **ஜெப கோபுரம்** மேலும் பல்வேறு இடங்களில் உள்ள அவருக்கு சொந்தமான பங்களாக்கள் **குடியிருக்கும் வீடு** ஆக மொத்தம் **28 இடங்களில் வருமான வரி** துறையும், **அமலாக்க** துறையும் **திடீர் பரிசோதனை** நடத்தி, மறைத்து வைக்கப்பட்ட **5 கிலோ தங்க கட்டிகள், கோயமுத்தூர் காருண்யா கல்லூ**ரி **கெஸ்ட் ஹவுசில் பதுக்கி வைத்திருந்த,** கணக்கில் வராத பணம் **128 கோடி ரூபாய்களை** கட்டுகட்டாக சிக்கினதாக இந்தியாவில் அனைத்து **தினப் பத்திரிகைகளிலும்** வெளி நாட்டு பத்திரிகையிலும், **இந்தியாவில்** உள்ள TV, **வெளிநாட்டில்** உள்ள TV சேனல்களில் புகைப்படத்தோடு செய்திகள் வெளியிடப்பட்டு **கிறிஸ்தவ உலகத்தை** அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. **இயேசு அழைக்கிறார்** ஊழியத்துக்கு **காணிக்கை** அனுப்பியவர்கள் அத்தனை பேரும் மனம் கலங்கி ஊழியத்துக்கு என்று எங்கள் **கஷ்டத்தின் மத்தியிலும் கொரோனா வருமை** காலத்திலும் இவர்களை நம்பி காணிக்கைகளை **இயேசு அழைக்கிறார்** ஊழியத்துக்காக என்று அனுப்பினோமே அந்த காணிக்கைளை இவர்கள் **வெளிநாட்டு வியாபாரத்துக்கு** பயன்படுத்த இவர்களுக்கு எப்படி துணிவு வந்தது ? என்று புலம்பினார்கள்.

- மற்றொருவர் இப்படி எழுதுகிறார் : இவர்கள் உண்மையான ஊழியர்கள் என்று நம்பி நாங்கள் அனுப்பிய காணிக்கையை இவர்கள் குடும்பமாக அனுபவிக்கும் **படகு உல்லாசத்துக்கும்** உலகத்தை சுற்றி பார்க்கவும், மிக **விலை உயர்ந்த** உடைகளை உடுத்தி **ஆடம்பரமாக** ஜீவிப்பதற்காகவா காணிக்கை அனுப்பினோம்? இவர்கள் உணமையானவர்க ள் என்று நம்பி **மோசம் போனோமே!** இவர்களை **திருடர்கள்** என்றும் மாய்மாலக்காரர்கள் என்றம் ஏன் கூறக்கூடாது ? என்று கூறியிருக்கிறார்கள்.

## கனடா வீட்டில் எடுக்கப்பட்ட குடும்ப ஜெப வீடியோ

**இயேசு அழைக்கிறார்** அலுவலகத்திலும் மற்ற இடத்திலும் பிடிப்பட்ட **கோடிக்கணக்கான** பணம், **தங்க கட்டிகள்** இவையாவும் TVயில் வெளி வந்த இரண்டாம்

நாள் ஞாயிறு இரவு **ராஜ் TV** சேனலில் DGS தினகரனின் **மூத்த மகளை** தவிர மற்ற எல்லாரும் மேஜையை சுற்றி அமர்ந்திருந்தர்கள். **முதலாவது** பால் தினகரனின் தாய், **பக்கத்தில்** பால் தினகரனில் **கடைசி மகள்,** அவருக்கு பக்கத்தில் பால் தினகரன், பால் தினகரனின் பக்கத்தில் **பாலின் மகனும்** கடைசியாக மருமகளும் **இருகின முகத்தோடு அவமானத்தால்** குன்றிப்போன நிலையில் அமர்ந்து **பொது மக்களுக்கு** காட்சியளித்தார்கள்.

**ஒருவர் கீழ்கண்டவாறு அந்த நிகழ்ச்சியை வர்ணித்தார் !**

- **ஒளித்து வைத்த 128 கோடி ரூபாய்களை**ப்பற்றியும் **5 கிலோ தங்க கட்டிகளையும்** பற்றி யும் **பால் தினகரன்** அவர்கள் அந்த TV நிகழ்ச்சியில் **விளக்கம் கூறுவார்** என்றுதான் எல்லாரும் எதிர்பார்த்தனர்.

இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் அந்த TV நிகழ்ச்சியில் இவர்கள் **உடுத்தின உடுப்பு** பால் தினகரனின் சின்ன மகள் **முட்டிக்குமேல்** அமைந்துள்ள உடையை உடுத்தியிருந்தார். பால் தினகரனின் **மருமகள்** ஒரு குழந்தைக்கு தாய், அவரும் கூட **முட்டிக்குமேல் துடை தெரிய** ஆபாசமாக உடை அணிந்திருக்கும் காட்சி **எங்கள் மனதை** மிகவும் வேதனைப்படுத்தியது. இதை எழுதுகிற நாங்களும் **கனடாவில்** 27 வருடம் வாழ்ந்து இப்போது இந்தியா திரும்பி வந்து நிலையாக இந்தியாவிலேயே குடியிருக்கிறாம்.

என் 3 **பெண் பிள்ளைகளும்** கனடா நாட்டில் பிறந்து **படித்து வளர்ந்தவர்கள்தான்,** அவர்களும் **கனடா நாட்டு** கலாச்சார உடைகளை உடுத்திதான் கல்லூரிக்கு சென்றார்கள். ஆனால் என் **பிள்ளைகளோ** அவர்களின் **வெள்ளைக்கார சினேகிதிகளோ** ஒரு நாளும் **கால் முட்டிக்கு** மேல் தொடை காணும்படி உடை உடுத்தியதில்லை. நாங்கள் அவர்களுக்கு ஆலோசனை எதுவும் கொடுக்காமலே தங்கள் ஆடையை அவர்களே தெரிந்தெடுத்து உடுத்துவார்கள். இங்கு நாங்கள் கூற நினைப்பது, இது **கலாச்சாரம்** பிரச்சனை **அல்ல, வெளிநாட்டு கலாச்சாரத்தில் வாழும்** (விபச்சாரிகளை தவிர) **வெள்ளைக்கார பெண்கள்** யாரும் முட்டிக்குமேல் உடை உடுத்துவதில்லை.

ஆனால் இங்கு **பால் தினகரனின்** குடும்பம் TVக்காக விசேஷமாக **அமர்ந்திருக்கிறோமே!** TV காமிரா தூரத்திலிருந்து படம் எடுக்கும் போது முழு உருவமும் **கால் பாதம் வரை** காமிராவில் பதிவாகுமே! என்ற கூச்சம் அவர்களுக்கு இல்லாமல் போனதேன். உலகமே அதை பார்க்கிறதே ! என்ற **கூச்சமோ** ! பயமோ ! அவர்களுக்கு இல்லாமல் போனதேன்.

சகோ. தினகரன் மனைவி Mrs. ஸ்டெல்லா அவர்கள் நல்ல தெய்வ பயமுள்ளவர். ஆனால் அவரால் **மகன் குடும்பத்தை** கண்டிக்கவோ, அதிகாரம் செலுத்தவோ அவருக்கு அந்த குடும்பத்தில் அதிகாரம் இல்லை. **குடும்ப நிலை அப்படி** ! மற்றவர்களுக்காக குறிப்பாக **வாலிபர்களுக்காக**, வாலிப **பெண்களுக்காக** பிரசங்கம் செய்யும் **பால் தினகரனாவது** தன் **மருமகளை** அல்லது மகன் தன் மலையாள தேசத்து **மனைவியை** நோக்கி போய் வேறு

உடையை மாற்றிக்கொண்டு வந்து உட்கார் என்று கூறியிருக்க கூடாதா? கிறிஸ்தவ சாட்சி மறைந்து போனதே !

சகோ. பால் தினகரனின் **மூத்த மகள்** சுதந்திர வாழ்கைக்கு அடிமையாகிப் போனார். பால் தினகரனின் **மகன்** தன் மலையாள தேசத்து **மனைவியை** கண்டித்திருக்கலாமே! இந்த காட்சியே **இவர்களுக்கும்,** கர்த்தருக்கும் **உள்ள இடைவெளியை** காண்பிக்கிறது. இந்த லட்சணத்தில் என் மருமகளும் ஜெபிக்கிறவள்தான் என்பதை காண்பிக்க அந்த நிகழ்ச்சியில் பால் தினகரன் தன் **மருமகளை** பார்த்து ஜெபிக்க கேட்டுக்கொள்கிறார். மருமகளின் ஜெபம் கேட்க நன்றாக இருக்கிறது. ஆனால் **உடையில் சாட்சியில்லையயே!** நாகரீகத்துக்கு ஒரு எல்லை உண்டு. **பணம் பெருகிபோனால்** எப்படியும் உடுத்தலாம்! எப்படியும் உலகத்தை அனுபவிக்கலாம் என்ற எண்ணம் தானாக வந்துவிடுகிறது.

வருமான வரித்துறை **28 இடங்களில்** திடீர் பரிசோதனை நடத்தி **128 கேடிகளும் 5 கிலோ தங்க கட்டிகளும்** பிடிபட்ட செய்தி கனடாவிலிருந்த பல தினகரனுக்க **வருமான அதிகாரிகளால் சம்மன்அனுப்பி** விசாரனைக்கு உடனே இந்தியா திரும்பி வர வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தது. அந்த **சம்மன்** தனக்கு கிடைத்த உடன் குடும்பமே **பயத்திலும்,** திகிலும் **அவமானத்திலும்** நிலைகுலைந்து போன நிலையில் அன்றைய TV நிகழ்ச்சியில் மிகவும் சோகத்துடன் காணப்பட்டார்கள். அந்த வருமான வரி சோதனை நடத்திய சம்பவத்துக்கு பின் **முதன் முறையாக** ராஜ் TV நிகழ்ச்சியில் சோகம் நிறைந்த முகங்களோடு காட்சியளித்தார்கள். அந்த நிகழ்ச்சியை **கனடாவிலேயே** வீடியோ எடுத்து ராஜ் TV க்காக அனுப்பியிருப்பார்கள் என்று தெரிகிறது. கனடாவில்தான் அந்த நிகழ்ச்சி எடுத்திருப்பார்கள் என்று கூற காரணம். பால் தினகரன் **மகள், மருமகள்** உடுத்திய உடையே அதற்கு காரணம்.

## சினிமா டான்ஸ் – கிறிஸ்தவ பாடகர் ஜான் ஜெபராஜும், இயேசு அழைக்கிறார் பால் தினகரனும்



நீங்கள் எல்லாரும் அறிந்தபடி AG சர்ச் பாஸ்டர் D.மோகன் முதல் தமிழ் நாட்டின் ஏறக்குறைய அனைத்து **பெந்தேகோஸ்தே** சபைகளும் **ஜான் ஜெபராஜ்** என்பவர் பாடல்களின் தலைவனாகிய **பிசாசின் ஆவியை** கொண்டவன். **துதிபாடல்களின்** ராகம் **இனிமையாக** இருந்தாலும் அவரின் **வாழ்க்கை,** அவர் கிறிஸ்தவ கூட்டங்களில் ஆடும் ஆபாச நடனம், மேடையில்

கிறிஸ்தவ பாடல்கள் இடையே **கொயாலே** என்று கூறுவதும் விசில்லடிப்பது. உர்ர்ர் என்ற சத்தங்கள் உண்டாக்குவதும் **ஓ** என்று **ஊளையிடுவது** இவர் வழக்கம். ஆகவே இவர் பாடல்களை பெந்தேகோஸ்தே சபையினர் பாட கூடாது என்றும் பாட்டு புஸ்தகங்களிலிருந்து அவர் பாடல்களை கிழித்தெரியுங்கள் என்று அறிவித்ததை நாம் யாவரும் அறிந்ததே. இவர் பாடும்போது வாலிப **பெண் பிள்ளைகளை** ஆட வைப்பது. **உருள வைப்பது** இப்படி **குத்தாட்ட பாடல்கள்** பாடி ஆபாச நடனம் ஆடுவதால் **வாலிபர்கள்** பலர் **சினிமா டான்சர்களாக** மாறினார்கள். அந்த வாலிபர்கள் யாரும் கிறிஸ்துவுக்காக வாழவில்லை.

இப்படி **ஜான் ஜெபராஜ்** பற்றி ஏராளமான புகார்கள் வந்தவுடன் பாஸ்டர் D. மோகன் அசெம்ப்ளீஸ்-ஆப்-காட் சபையில் உபயோகிக்கும் பாடல் புஸ்தகங்களில் உள்ள **ஜான் ஜெபராஜ்** பாடல் அடங்கிய தாள்களை கிழித்தெரிய கேட்டுக்கொண்டதாக அறிந்தேன்.

- ☐ அப்படிப்பட்ட சாட்சியில்லா நபரான **ஜான் ஜெபராஜ்** கூறுகிறார். **இயேசு அழைக்கிறார்** Dr. பால் தினகரன் அவர்கள் தனக்கு எப்போதெல்லாம் கவலையோ, குழப்பமோ ஏற்படும்போது அவர் என்னை தொலைபேசியில் அழைத்து பேசுவார். யார் ! யாரை அழைத்து ஆறுதல் பெருகிறார் பாருங்கள் !

மேலும் ஜான் ஜெபராஜ் கூறியதாவது ஒருநாள் **கர்த்தர் என்னோடு பேசினார்.** அப்போது கர்த்தர் ஒரு பாடலையும் தந்தார். அந்த பாடலுக்கான **வரிகளையும் கூறினார்.** கர்த்தர் **கொடுத்த வார்த்தைகளுக்கு** நான் இராகம் அமைத்தேன். அந்த பாடலை Dr. **பால் தினகரன்தான் பாட வேண்டும்** என்று கர்த்தர் கூறியதால் பாடல் ரிக்கார்டிங்க்கு Dr. பால் தினகரனிடம் நேரம் கேட்டு அவர் கொடுத்த நாளில் இசை கருவிகளோடு அமர்ந்து அவருக்கு இராகம், தாளம் யாவும் நானே சொல்லி கொடுத்து **அவரை பாட வைத்து** ரிகார்ட் பதிவு செய்தேன். அப்போது பால் தினகரனிடம் கூறினேன். நீங்கள் பாடி **TVயில் வெளிவந்தபின்தான்** நான் இந்த பாடலை பொது மக்களுக்கு வெளியிடுவேன் என்று என் ஆண்டவரிடம் பொருத்தனை செய்துள்ளேன். பால் தினகரனிடம் கூறினேன். அதற்கு அவர், பிரதர் உங்களைப்போல் நான் பாட முடியாவிட்டாலும் நீங்கள் அன்புடன் கேட்டுக்கொண்டபடியால் பாடுகிறேன் என்று கூறினாராம்.

சுமார் 6 மாதங்கள் கழித்து **128 கோடியும் 5 கிலோ தங்க கட்டிகளும்** வருமான வரி துறையினரால் **பிடிப்பட்டு உலகத்திலுள்ள** இயேசு அழைக்கிறார் பங்காளர்கள் முன் **அவமானப்பட்டு** தலைகுனிவு ஏற்பட்ட நிலையில் அன்று இரவு ராஜ் **TVயில்** 8-30 மணிக்கு முழு குடும்பமும் **சோகத்தோடு மேஜையின் முன்** அமர்ந்திருக்கும்போது **பால் தினகரன்** பேச துடங்கினார். தான் வருமானவரி துறையினரால் **பிடிபட்டதையோ,** தனக்கு **சம்மன்** அனுப்பியதை பற்றியோ எதையும் கூறாமல் தான் **துக்கப்பட்ட நாட்களில்** என ஆறுதல் **இயேசு மாத்திரமே** என்று வழக்கம்போல் மற்றவர்களுக்கு **ஆறுதல் கூறுவதைபோல** கூறி அவர் தன்னையும் தேற்றிக்கொண்டு, தொடர்ந்து அவர் பேசும்போது பிரபல பாடகர் **ஜான் ஜெபராஜ்** 6 மாதங்களுக்கு முன் என்னை தொலைபேசி மூலம் என்னோடு பேசினார்.

பிரதர் கர்த்தர் **உங்களுக்காகவே** பாடல் ஒன்றை என்னை எழுத வைத்து உங்களைக் கொண்டே பாடச் சொன்ன இந்த பாடலுக்கு நானே இராகம் அமைத்துள்ளேன். **நீங்கள்தான் பாடவேண்டும்** என்று கட்டாயப்படுத்தினார். **6 மாதங்ளுக்கு முன் பதிவு செய்யப்பட்ட** பாடலை இப்போது நீங்கள் கேட்கலாம் என்று கூறிய உடன் பாடல் யாவும் Raj TV யில் ஒலிபரப்பப்பட்டது. அந்த பாடலில் வரும் **வார்த்தைகளில்** ஒன்று **நான் கடினமான சூழ்நிலையில் இருந்தபோது என்னோடு இருந்தவர்கள் எல்லாரும் என்னை விட்டுப் போய்விட்டனர்.** என்ற வார்த்தைகள் அவரின் அன்றைய சூழ்நிலையை வெளிப்படுத்தின.

Informer என்று **போலீஸ், வருமான வரி** துறையினருக்கு ஒவ்வொரு ஸ்தாபனங்களிலும் ஸ்தாபன உரிமையாளர்களுக்கு தெரியாதபடி சில நபர்கள் இருப்பார்கள். அவர்கள்தான் போலீசுக்கும் வருமான வரி துறைக்கும் தகவல் அளிப்பார்கள். உதாரணமாக இந்த லாரியில் இப்படிப்பட்ட சரக்குகள் வருகிறது என்று அறிவித்தால் உடனே செக்போஸ்டில் பிடித்துவிடுவார்கள். அதேபோல் **காருண்யா கல்லூரியிலும்** வருமான வரித் துரையினருக்கு Informer உளவாளி இருந்ததால்தான் **கெஸ்ட் ஹவுஸில்** இத்தனை வருடம் பதுக்கி வைத்த வருமான துறைக்கு காட்டாத 128 கோடி **பணம்** ஒளித்து வைத்து இருப்பதையும், வீட்டில் **தங்க கட்டிகள்** பதுக்கி வைக்கப்பட்ட யாவையும் அதிகாரிகளால் கண்டு பிடிக்க முடிந்தது.

இந்த சூழ்நிலையில் தன் தகப்பன் DGS தினகரன் அவர்களின் **மரண நாளை நினைவு கூறும்** தினத்துக்கு **இந்தியாவில்** சென்னையில் உள்ள கல்லரைக்கு பால் தினகரன் வர இருப்பதை வருமான வரி துரையினர் அறிந்தார்கள், அதன்பின் பால் தினகரனை அழைத்து சென்று அவர்கள் விசாரனை முடித்த பின்தான் கல்லரையில் அவர் பேசியதை அதே Raj TVயில் காட்டினார்கள். தன் தகப்பனின் கல்லரை அருகில் **பால் தினகரன்** நின்று கூறியதாவது என் **அப்பாவிடம் இயேசு பேசியதைபோலவே** அன்று என்னிடமும் பேசினார். இதோ என் தங்கை ஏஞ்ஜலின் கல்லரைக்கும் அப்பா DGS தினகரன் கல்லரைக்கும் **நடுவில்தான் இயேசு நின்றபடி** என்னோடு பேசினார். **உன் தகப்பன்** DGS தினகரனுக்கு **நான் கொடுத்த** அதே **அற்புத வரங்களை** உனக்கு கொடுப்னே் என்று கூறினார் என்று பேசினார்.

இந்த விஷயத்தை எந்த சூழ்நிலையில் பால் தினகரன் பேசுகிறார். கவனியுங்கள். 128 கோடிகளும் **5 கிலோ தங்க கட்டிகளும்** பிடிபட்ட நிலையில் **இயேசு அழைக்கிறார் ஊழிய கதவுகள்** அடைபட்டு மக்கள் **பால்தினகரனையும்** இயேசு அழைக்கிறார் ஊழியத்தையும் **வெறுத்த நிலையில்** இப்படி பேசுகிறார்.

அதன்பின் ஒரு வாரம் கழித்து **பழைய சில நிகழ்ச்சிகளை** அந்த ஞாயிறு Raj TVயில் காட்டினார்கள் யாரோ தொலைபேசியில் பேச, இவரும் நான்தான் **பால் தினகரன்** பேசுகிறேன். உங்கள் பிரச்சனை என்னம்மா ? என்று கேட்டு அவர்களுக்காக ஜெபித்தார்.

அடுத்த ஞாயிறு Raj TV நிகழ்ச்சியில் சாட்சி கூறும் நிகழ்ச்சியில் ஒரு பெண் தன் சாட்சியை கூறுகிறாள், தன் சரீரத்தில் பிசாசின் போராட்டம் தாங்காமல் **தற்கொலை** செய்ய திட்டமிட்டு சாகும்முன் கோயமுத்தூர் **காருண்யாவில்** உள்ள **பெதஸ்தா குளத்துக்கு** போவோம் என்று புறப்பட்டு போனேன். அங்கு போனவுடன் **பிசாசின் போராட்டம்** எல்லாம் என்னைவிட்டு நீங்கிவிட்டது என்றார். உடனே பால் தினகரன் கூறுகிறார். ஆம் அம்மா நீங்கள் கூறுவது உண்மை. காரணம், **பெதஸ்தா எங்கும் இயேசு உலாவிக்கொண்டு இருக்கிறார்.** அதனால் **பெதஸ்தாவுக்கு** போவோருக்கெல்லாம் **சுகம் கிடைக்கிறது** என்று கூறி பெதஸ்தாவை வைத்து வருமானத்துக்கு வழி உண்டாக்க திட்டமிட்டுவிட்டார்.

சூட்டோடு சூடாக **காணிக்கை வியாபாரத்துக்கு**ம் விதை போட்டார். இப்படி **பெதஸ்தாவில்** ஏராள மானவர்களுக்கு **சுகம் கிடைப்பதால்** இப்போது அதை விரிவுபடுத்தி **மண்டபம், தங்கும் விடுதி** யாவும் **பல கோடி ரூபாய்** திட்டத்தில் **கட்டிக்கொண்டிருக்கிறோம்.** ஏவப்பட்டவர்கள் ஒரு **சதுர அடிக்கு 5000/-** கொடுத்தால் கர்த்தரால் நீங்கள் பல லட்சம் **ரூபாய்கள்** பெற்று **ஆசீர்வதிக்கப்படுவீர்கள்** என்று **பெதஸ்தா** புதுப்பிப்பதை TVயில் காட்டினார்கள். இப்படி மறுபடியும் **பெதஸ்தாவை** வேளாங்கன்னி போல **புண்ணிய ஸ்தலமாக்கி** டூரிஸ்ட் **அட்ராக்ஷனை** ஏற்படுத்தி மறுபடியும் **ஊழிய வியாபாரத்தை** புதுபித்து புது வியாபாரத்தை துடங்கிவிட்டார் பால் தினகரன். காரணம் **128 கோடி, தங்க கட்டிகள்** பால் தினகரன் வீட்டில் பிடிபட்டதை தொடங்கி **லட்சக்கணக்கானவர்கள்** காணிக்கை **அனுப்புவதை நிறுத்திவிட்டதாக** அறிந்தேன்.

பிடிபட்ட **128 கோடிகள்,** 5 **கிலோ தங்கம்** இதற்கு **பால் தினகரனுக்கு தண்டனை என்ன?** என்று பலர் ஆவலோடு என்னை கேட்கிறார்கள். நான் சொன்னேன் இவர்களுக்கு இதெல்லாம் சாதாரண விஷயமப்பா இவர்களுக்கு எத்தனை **ஆடிட்டர்கள்** எத்தனை **வக்கீல்கள் மாத சம்பளம்** வாங்குவது போல் **பெரும் தொகையை** இயேசு அழைக்கிறார் Trustடிலிருந்துதான் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த **128 கோடி** பதுக்கல் **5 கிலோ தங்கம்** பிடிபட்டது **இதெல்லாம்** கனடா விலிருந்து பால் தினகரன் **புறப்படும்முன்பாகவே** அந்த வழக்கை **ஒன்றுமில்லாமல்** அமுக்கிவிட்டிருப்பார்கள். **புகைப்படத்தோடு வருவானவரி** துறையினர் பிடித்த பணம் தங்க கட்டிகள் மற்ற ஆவனங்களைப்பற்றி பக்கம் பக்கமாக **செய்திகள் சேகரித்து** பத்திரிகைகளில் வெளியிட்ட அத்தனை **செய்திதாள்களின் வாயை** எதைக்கொண்டு **பால் தினகரன் குடும்பத்தினர்** அடைத்தார்களோ தெரியவில்லை. ஒரு பத்திரிகைகூட **பால் தினகரன் இந்தியாவுக்குள்** எப்போது நுழைந்தார் **விசாரனை** எந்த அலுலகத்தில் நடந்தது போன்ற விவரங்களும் அதோடு அந்த சம்பவத்துக்கு பின் நடந்த

எந்த விஷயத்தையும் பத்திரிகைகாரர்கள் யாரும் எழுதவில்லை. ஆனால் பல அதிர்ச்சிதரும் செய்திகள் ஜாமக்கானுக்கு மட்டும் வந்தது.

இவ்வளவு சாட்சியிழந்த அதிர்ச்சி செய்திகள் அடுத்து அடுத்து நிகழ்ந்தபோதும் ஒன்றும் நடக்காதது போல் TVயில் பால் தினகரன் **ஜெபத்தில் பழையபடி பெயர்களை அழைக்க** தொடங்கிவிட்டார். பழையபடி **வரங்கள் செயல்படுவதை போல** மக்கள் நம்புவதற்காக **பரிமளா** என்ற பெயருள்ள பெண்ணை கூப்பிடுகிறார். **இடுப்பில் தோல் வியாதி** உள்ளவர்களின் பெயரை குறிப்பிடுகிறார். இப்படி ஜெபத்தில் **பெயர் அழைக்கும் கள்ள ஊழியர்களை** நம்புவதற்கு நாட்டில் பலர் உண்டு.

இதன் மத்தியில் சில மாற்றங்களும் நடந்துள்ளது. இயேசு அழைக்கிறார் ஊழியத்துக்கு இதுவரை **காணிக்கை** அனுப்பிய பல ஆயிரம் பேர் இவர்களக்கு பணம் அனுப்புவதை நிறுத்திவிட்டு **மிஷனரி பணிக்கு** காணிக்கையை அனுப்ப தொடங்கிவிட்டனர் என்ற செய்தியை தொலைபேசியில் பலர் சந்தோஷத்தோடும் **தைரியத்தோடும்** பேசிய **இளம் பங்காளர்கள்** குறித்து கர்த்தரை துதிக்கிறேன்.

## புதிய வாழ்க்கை தொடங்க ஏற்பாடுகள்

**இயேசு அழைக்கிறார்** ஊழியத்தின் **வாசல்கள் அடைபட்டது. பால் தினகரனை** ஊழியத்தில் கை தூக்கிவிட AOG சபை பாஸ்டர் D. மோகன் அவர்கள் முன் வந்திருக்கிறார். அவர் ஆராதனையில் பால் தினகரன் நம் சபை **கன்வென்ஷனில்** 3 நாட்கள் பேச போகிறார் என்றும் எல்லாரும் ஜெபித்துக் கொள்ளுங்கள் என்றும் வேண்டுகோள் விடுத்ததாக அறிந்தேன். பாஸ்டர் மோகனை தொடர்ந்து பலர் பால் தினகரனை அழைத்து கூட்டம் நடத்த இது ஒரு வழிகாட்டாக இருக்கும்.

☐ **பாவம் இறுதியானது அல்ல** என்று Dr. Rev. **தியோடர் வில்லியம்ஸ்** அவர்கள் எழுதி தான் செய்த தவறை **வெளியரங்கமாக** அறிக்கையிட்டு அதை **ஜாமக்காரனிலும்** எழுதி மக்களுக்கு **அறிவிக்க செய்து**, மறுபடியும் ஊழியத்தை வல்லமையாக செய்து **சாகும்வரை** ஏராளமான **ஆத்துமாக்களை** கர்த்தரிடம் கொண்டு வந்தாரே !

அப்படியே **பால் யாங்கிசோ** என்ற உலக பிரசத்திபெற்ற பிரசங்கியார் 10 லட்சம் சபை மெம்பர்களை உருவாக்கி உலகின் மிகப்பெரிய திருசபையின் பாஸ்டர் என்ற பெயர் பெற்றவர், **சபை காணிக்கையை ஷேர் மார்கெட்டில்** போட்டு பணம் **சம்பாதித்ததால்** தன் சபை மக்களே கொரியா அரசுக்கு அந்த திருட்டை அறிவிக்க, உடனே கொரியா அரசாங்கம் அவரை ஜெயிலில் அடைத்தனர்.

அதே பால் யாங்கிசோ **ஜெயிலிருந்து** வெளியே வந்தவுடன் தன் சபை மக்களிடமும் கர்த்தரிடமும் மன்னிப்பு கேட்டு தன் தவறை வெளியரங்கமாக அறிக்கையிட்டு மறுபடியும் ஊழியம் செய்து கொண்டு இருக்கிறாரே! இவர்களைப்போல் சகோ. பால் தினகரன், **இயேசு அழைக்கிறார் ஊழிய பணத்தையும்** இளம் பங்காளர் திட்டத்துக்கு **அனுப்பப்பட்ட பணத்தையும்** காருண்யா கல்லூரி மாணவர்களிடமிருந்து அரசாங்கத்தின் சட்டத்துக்கு விரோதமான முறையில் மாணவர்களிடம் வாங்கிய **கருப்பு பணத்தை குறித்து** வெளியரங்கமாக தன் **இயேசு அழைக்கிறார்** பத்திரிகையிலும் **TV நிகழ்ச்சிகளிலும்** அறிக்கையிட்டு **மன்னிப்பு கேட்டு** மறுபடியும் **ஊழியத்தை தொடங்கினால்** கர்த்தரின் நாமம் மகிமைப்படும், மறுபடியும் சரியான ஊழியம் செய்யும் தகுதியும் உண்டாகும்.

**அமெரிக்க நாட்டு பிரபல தீர்க்கதரிசி என்று அழைக்கப்பட்டவர் பாவத்தில் விழுந்தார்**.

2021 பெப்ரிவரி 22ம் தேதி அமெரிக்காவில் பிரபல தீர்க்கதரிசி என்று அழைக்கப்பட்ட Jerimiah Johnson என்பவர் தான் மறைமுக பாவத்தில் வழுந்ததுமல்லாமல் தான் நாலுமாவடி மோகன் C. லாசரஸ், பால் தினகரன் போல **2021ம் ஆண்டுக்கான தீர்க்கதரிசனம் கூறினார்.** அதில் கர்த்தர் தனக்கு தெளிவாக அமெரிக்க நாட்டைப்பற்றி கூறினார் என்றும் குறிப்பாக **அமெரிக்க பிரிசிடன்ட்** தேர்தலில் **டோனால்ட் ட்ரம்ப்** அவர்தான் எலக்ஷனில் **ஜெயித்து ஜனாதிபதியாக** ஆளப்போகிறார் என்று அறிவித்து இவரின் எல்லா Online ஊழியங்களில் அறிவித்து மிக பிரபலமானார். ஆனால் **அவரின் தீர்க்கதரிசனம் பொய்த்து** போயிற்று. உடனே பல இடங்களிலிருந்து அவருக்கு எதிர்ப்பு கிளம்பியது. அவர் சபை அடைக்கப்பட்டு போலீஸ் காவல் வைக்கப்பட்டது. 2021 ஜனவரி மாதம் 7ம்தேதி இரண்டு வீடியோவை வெளியிட்டார். **தான் தவறாக தீர்க்கதரிசனம்** கூறிவிட்டதாகவும், பிசாசு என்னை **வஞ்ஜித்துவிட்டான்**. ஆகவே என் சபை விசுவாசிகள். அமெரிக்க மக்கள் அனைவரிடமும் **மன்னிப்பு கேட்கிறேன்.** இனி நான் **தீர்க்கதரிசனம் கூறமாட்டேன்.** வசனத்தை மட்டும் பிரசங்கிப்பேன் என்னை மன்னித்து என் ஊழியத்தை மறுபடியும் நடத்த உதவுங்கள் என்று கண்ணீரோடு பகிரங்க மன்னிப்பு கேட்டார். அந்த வீடியோவின் பெயர் I Was Wrong நான் தவறு செய்துவிட்டேன் என்பதாகும். மேலும் **நான் தவறான தீர்க்கதரிசனம்** கூறியதற்கு கர்த்தர் **என்னை தண்டித்துவிட்டார்.**

என் **தலைமை சபை அலுவலகம்** முழுவதும் **பெரும் புயல் காற்றும் மழையும்** வந்து எல்லாவற்றையும் இழந்தேன்.

சிலருக்கு **தண்டனை** மரணத்துக்கு முந்திக்கொள்ளும் என்ற வசனத்தின்படி எனக்கு தண்டனை புயலால் ஏற்பட்ட பெருத்த அழிவு, நஷ்டம் மூலம் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கிறேன். என்னை காணிக்கைகளால் ஜெபத்தால் தாங்குவோர் எல்லாரையும் இழந்தேன். அதுதான் கர்த்தர் எனக்கு அனுமதித்த தண்டனையாகும் என்று அழுதுகொண்டிருக்கிறார். – செய்தி Premier Christian News ( PCN )

தமிழ்நாட்டு **தீர்க்கதரிசிகளாக** தங்ளை அழைத்துக்கொள்ளும் சகோ. **பால் தினகரன், சகோ. மோகன் C. லாசரலஸ், ஆலன் பால், ஸ்டீபன்** ஆகியவர்களுகக்கு மேலே குறிப்பிட்டவர்களின் சாட்சியம் தண்டனையும் எச்சரிக்கையாக இருப்பதாக.

இனி ஜெபத்தில் யாருடைய பெயரையும், கர்த்தர் காட்டினார் என்ற **பொய் ஊழியததை பால் தினகரன்** செய்தாலும் **மோகன் C.லாசரஸ்** செய்தாலும் அப்படிப்பட்ட ஊழியம் இனி எடுபடாது.




இதுதான் சகோ. மோகன் C. லாசரஸ் அவர்களின் பொய்யான தீர்க்கதரிசனம்

☐ பக்கத்தில் படத்தில் காண்பது நாலுமாவடி மோகன் C. லாசரஸ் அவர்கள் 2020 ஜனவரி மாதம் புதிய வருடத்தில் கர்த்தர் உங்களிடம் கூறச்சொன்ன 2020ம் வருடத்துக்கான திர்க்கதரிசனம் - 2020 புதுவருடம் ஆசீர்வாதமான ஆண்டாகும். உங்களுக்காக ஜெபிக்கும்போதுதான் கர்த்தர் நேரிடையாக இந்த வாக்குத்தத்தைக் கொடுத்தார். இந்த 2020ம் **வருடம் நீங்கள் இரட்டிப்பான நன்மைகளை பெருவீர்கள்** என்றார். நடந்தது என்ன என்று நீங்கள் யாவரும் அறிந்ததுதானே. இவர் **தீர்க்கதரிசனம்** கூறிய **மறுவாரமே கொரோனா கிருமி** தாக்கத்தால் **வேலை இழந்தவர்கள்** எத்தனைபேர், வியாபாரத்தில் நஷ்டம் பல மாதங்கள் கடை திறக்கப்படவில்லை, ஓட்டல்கள் மூடப்பட்டது. பெரிய கம்பெனிகள் மூடப்பட்டது. அதனால் வேலை இழந்து தற்கொலை செய்தவர்கள் எத்தனைபேர். சகோ. மோகன் C. லாசரஸ் குடும்பத்திலேயே இப்படிப்பட்ட கொரோனோ தொற்று மூலம் இழப்பை அனுபவித்தவர் எத்தனைபேர். **இதுவா புது வருட தீர்க்கதரிசன செழிப்பு. கள்ள தீர்க்கதரிசி** என்று **ஏன் அழைக்கக்கூடாது ?** இன்னும் எத்தனை நாள் இவரின் **பொய் தீர்க்கதரிசனத்**தை தமிழ்நாட்டு கிறிஸ்தவர்கள் சகிக்க போகிறார்கள். இப்போது நான் இந்த புகைப்படத்தோடு கட்டிய ஆதரத்தை பார்த்துமா இவர் கள்ள திர்க்கதரிசி, இவர் அழுவது மாய்மாலம் என்று உங்களால் நம்ப முடியவில்லை. நான் இப்படி எழுதியதை குறித்து நீங்கள் ஏன் அவரிடம் சென்று அமர்ந்து கேள்வி கேட்கக்கூடாது ? நான் எச்சரிப்பை அறிவித்துவிட்டேன். இனி உங்கள் இஷ்டம்.

மேலே கூறிய இந்த **கள்ள ஊழிய சம்பவங்களின்** மத்தியில் நடந்த மற்றொரு **சம்பவம்** என்னவென்றால்...

## நாலுமாவடி மோகன் C. லாசரஸ் அவர்களின் சிபாரிசு

**சத்தியம்** TV **சேனலில்** மோகன் C.லாசரஸ் அவர்கள் **பால் தினகரனை** காப்பாற்ற

**பகிரங்கமாக** அறிக்கை ஒன்றை வெளியிட்டார். **இயேசு அழைக்கிறார்** ஊழியத்துக்கு வந்த அவமானத்தை நம்ப வேண்டாம். அவை யாவும் வதந்திகள் என்றும் யாரும் அதை **நம்ப வேண்டாம்** என்றும் கூறியது மட்டுமலலாமல் பால் தினகரனை **தெய்வதாசன்** என்ற அடைமொழியோடு கூறி அவர்கள் மீது சில ஊழியர்கள் **தெய்வதாசன்** மீது சேற்றை வாரி இறைத்து **அவமானபடுத்துகிறார்கள்** என்றும், அப்படி ஒரு **நிகழ்ச்சி நடக்கவேயில்லை** என்றும் **பொய்யான** இப்படிப்பட்ட **வதந்திகளை** நம்பவேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டு பால் தினகரனுக்காக நாம் எல்லாரும் ஜெபத்தில் தாங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

- ☐ பல வருடங்களுக்கு முன்பு சகோ. DGS தினகரனும் பால் தினகரனும் **இந்துமத மடாதிபதி சங்காராச்சாரியார்** அவர்களை சந்தித்து அவர் ஆசீர்வாதமும்பெற்று அவருக்கு **இயேசு அழைக்கிறார் ஊழியம், காருண்யா கல்லூரி** சார்பாகவும் **வெள்ளியினால் செய்த பூஜை** பெட்டியை சங்கராச்சாரியார் பிரயாணத்தில் உபயோகிக்கும் வகையில் **விக்கிரகங்களுக்கு** பூஜை செய்ய தேவையான பூஜை பொருள்கள் சிறு கரண்டிகள் அடங்கிய சுத்த வெள்ளியால் விசேஷமாக தயாரித்த **பூஜை பெட்டியை** அன்பளிப்பாக அப்பனும், மகனும் அவருக்கு கொடுத்த செய்தியை ஜாமக்காரனில் வெளியிட்டபோது முதலாவது அதை மறுத்தது நாலுமாவடி மோகன் C லாசரஸ் ஆகும். அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என்பதை நான் கர்த்தரிடம் கேட்டு அறிவிக்கிறேன் என்றார்.

சகோ. **தினகரனிடம்** நான் நேரில் சென்று அவரை விசாரித்து **அந்த சம்பவம் பொய்** என்றும் சகோ. தினகரனே அதைப்பற்றி தன்னிடம் கூறியதை உங்களுக்கு அறிவிக்கிறேன் என்றார். அதை கேட்பவர்கள் அந்த சம்பவத்தை எழுதிய Dr. புஷ்பராஜ் ஆகிய **என்னை அல்லவா பொய்யன்** என்று நினைப்பார்கள் என்று உடனே நானே **வட இந்தியா** சென்று அந்த செய்திகளை புகைப்படத்தோடு வெளியிட்ட **ஹிந்தி சமாச்சார்** என்ற பத்திரிகை அலுவலகம் சென்று நானும் அதிகாரபூர்வ பத்திரிக்கை ஆசிரியர் என்று என்னை அறிமுகப்படுத்தி அத்தனை **புகைப்படங்களையும்** அந்த **தினசரி பத்திரிகை ஒன்றையும்** பல ஆயிர ரூபாய்கள் விலைகொடுத்து அந்த **புகைப்படங்களை** வாங்கி என் ஜாமக்காரனில் வெளியிட்டபின்தான் இவர்கள் அடங்கினார்கள். மக்களுக்கு ஒரு தெளிவு உண்டானது. **பொய்யனுக்கு – பொய்யன்** துணை போகிறான் என்ற சொல் எனக்கு ஞாபகம் வருகிறது.

மேலே குறிப்பிட்ட **இரண்டு பொய்களைப்பற்றியும்,** அதை கூறிய பொய்யர்களைப் பற்றியும் என்ன நினைக்கிறீர்கள். இவர்கள் **அழுது ஜெபிப்பதை** TVயில் **கண்டவர்கள்** இவர்களை நம்பவே முடியவில்லையே என்று அழுகிறார்கள். **கள்ளனுக்கு கள்ளன்** சிபாரிசு செய்வதில் ஆச்சரியமில்லை அல்லவா!

அதை போலவே **128 கோடி 5 கிலோ தங்கம்** இவைகள் யாவும் **வெறும் வதந்திகள்** நம்ப வேண்டாம் என்று பால் தினகரனுக்காக மோகன் சி. லாசரஸ் சிபாரிசு செய்கிறார். **ஜெபத்தில் பெயர் அழைப்பதில்** இவர்கள் எல்லாரும் ஒரே மாதிரியான **பொய்யை பேசுகிறார்கள். மோகன்** C. **லாசரஸ்** கூட்டத்தில் HIV **எயிட்ஸ்** வியாதியஸ்தனை, என் அருகே இருந்த இயேசு மேடையிலிருந்து இறங்கி கூட்டத்தில் நடந்துசென்ற **கோபால்** என்ற வாலிபனை **சுகமாக்குவதை காண்கிறேன்** என்றார். அந்த பையனை பரிசோதித்த **டாக்டர்கள் குழு** அவன் **எயிட்ஸ் வியாதி** சுகம் ஆகவில்லை என்றும் அது மாத்திரமல்ல **அந்த வியாதி** அவனுக்கு மேலும் அதிகமாக **கூடியிருக்கிறது** என்றும் எழுதிய விவரத்தை சகோ. **மோகன் C. லாசரஸ்க்கு** அனுப்பினேன். பதில் எழுதவில்லை. **இயேசு விடுவிக்கிறார்** பெரும் சொத்துக்கு **டிரஸ்டிகளில்** ஒருவரும் பாளையம் கோட்டையில் பிரபல டாக்டருமான Dr. **அன்பு** அவர்களுக்கு எழுதினேன். நீங்களும் **டாக்டர்தானே.** உலக **மருத்துவ கழகத்தின் அறிக்கையில்** இது நாள் வரை **எயிட்ஸ்** (HIV) வியாதி **உலகில் யாருக்குமே சுகம் கிடைக்கவில்லை** என்கிறது. அப்படியிருக்க மோகனின் **பொய்யான** தீர்க்கதரினத்துக்கு நீங்களும் **துணை போகிறது** தவறு என்பது உங்கள் **மனசாட்சிக்கு** நன்றாக தெரியுமே! என்றேன். அவரும் **பதில் கூறவில்லை. பொய்க்கு – பொய் துணை போகிறதை** அறிந்தும் திருநெல்வேலியில் உள்ள **நல்ல விசுவாசிகள்** எப்படி இதை குறித்து இந்த பொய்யர்களிடம் **கேள்வி கேட்காமல்** இருக்கிறார்கள் ? என்பதை குறித்து ஆச்சரியப்பட்டேன். ஆனால் சிலர் எழும்பி **மோகன் C. லாசரஸின்** வேறு சில பொய்களைக் குறித்து எனக்கு எழுதி இவர் பொய் பேசி **மக்களை ஏமாற்றுகிறார்** என்று **பொது நல வழக்கு** போட இருக்கிறோம் என்றார்கள். நான் தான் அப்படி செய்ய வேண்டாம் இப்போதுதான் இவர்மேல் போடப்பட்ட 8 வழக்குக்கு நீதிமன்றத்தில் மன்னிப்பு கேட்டு எழுதிகொடுத்து சிறை தண்டனையிலிருந்து தப்பினார். மேலும் அப்படி கோர்ட்டுக்கு போனால் **கிறிஸ்தவ பெயர்** குறிப்பாக **திருநெல்வேலி இனத்தவரின்** பெயர் **நாறிபோகும்** விட்விடுங்கள் என்று எழுதினேன்.

- ☐ ஆனால் **கொரோனா** லாக் டவுன் காலம் **சத்தியம்** TV மூலம் இவர்களின் **ஜெப நேரங்கள்** பல சபை மக்களை மிகவும் கவர்ந்தது. அது இவர்களுக்கு மிகவும் **சாதகமாகி பொய்க்கு மேல் பொய்** உபதேசங்களை அறிவித்து சத்தியம் TVயை காணும் பெரியவர்கள் முதல் சிறு பிள்ளைகள் வரை ஏமாற்றி பிசாசின் கையில் ஒப்படைத்தார். **பொய்யான உபதேசங்களை** கூறி பெரும்பாலானவர்களை **மடையர்களாக்கினார்.** ஜெபிக்கும்போது **இயேசுவை** மோகன் C. லாசரஸாகிய நான் **முகமுகமாக நேரிடையாக** பார்த்து பேசுவதுபோல இங்கு கூடியுள்ள யாவரும் TV பார்த்துக்கொண்டிருப்பவர் யாவரும் **இயேசுவை முகமகமாய் பார்த்து** ஜெபிக்கலாம் என்று **பெரிய பொய்களை** அள்ளி வீச அதை உண்மை என்று எண்ணி பலர் **மண அழுத்தத்துக்கு** உள்ளானார்கள். **இயேசுவை முகமுகமாய் பார்க்கமுடியாது** என்பதை வாசகர்கள் அறியுங்கள். இதற்கு விளக்கம் பழைய ஜாமக்காரனலேயே எழுதிவிட்டேன்.

**ஜெபத்துக்கு பதில் பெறுவது எப்படி ? மோகன் C. லாசரஸ்ஸின் மற்றொரு தவறான ஜெப உபதேசம்**

**அடுத்தது TV சத்தியம் சேனலில் வாங்க ஜெபிக்கலாம்** என்ற பெயரில் நடந்த நிகழ்ச்சியில் சமீபத்தில் மோகன் C. லாசரஸ் பேசினார். தான் ஒரு காரியத்துக்காக பலமுறை ஜெபித்தும் பதில் கிடைக்கவல்லை. ஏன் கிடைக்கவில்லை என்று நொருங்கிப்போனபோதுதான் **கொரியா தேசத்து** உலகில் 10 லட்சம் அங்கத்தினர்கள் உள்ள **சபை பாஸ்டரும்** பிரபல உலக பிரசங்கியுமான **பால் யாங்கிசோ** அவர்களின் அனுபவம் மூலம் கர்த்தர் என்னோடு பேசினார் என்றார்.

அதாவது **பால் யாங்கிசோவின்** ஆரம்ப காலத்தில் ஊழியத்துக்கு ஒரு **சைக்கிள்**, எழுவதற்கு ஒரு **மேசை – நாற்காலி** வேண்டும் என்று ஜெபித்தாராம். பல மாதங்கள் ஜெபத்துக்கு பதில் ஏதும் கிடைக்கவில்லை. பாஸ்டர் சோர்ந்து போனார். ஒரு நாள் **இயேசு** அவர் முன் தோன்றி உன் ஜெபத்துக்கு ஏன் நான் பதில் கொடுக்கவில்லை தெரியுமா? நீ சைக்கிள் கேட்டாய், ஆனால் சைக்கிள்கள் பல வகைகள் உண்டு. உனக்கு **எந்த பிராண்டு சைக்கிள்** வேண்டும். **ஹேன்டில்பார் வளைந்தது** வேண்டுமா ? நீண்ட ஹேன்டில்பார் வேண்டுமா என்பதை நீ **தெளிவாக கூறவில்லை.** அடுத்து **மேஜை** – நாற்காலி கேட்டாய் ஆனால் **மேஜையின் நீளம் அகலம்** எந்த விதமான **மரத்தால்** செய்தது என்பதை குறித்து **நீ தெளிவாக கூறவில்லை** அதனால்தான் உன் ஜெபத்துக்கு பதில் கொடுக்கவில்லை என்று இயேசு கூறினாராம். அதன் பின்தான் தன் தவறான ஜெபத்தை விளங்கிக்கொண்டு **தன் வீட்டின் வாசலின் அகலம்** அளவெடுத்தார். தான் **உயரம் குறைவு** அதற்கு ஏற்ற **வளைந்த ஹேன்டில்பார்** உள்ள **சைக்கிளின் படம்** வரைந்து எழுதி கை வைத்து ஜெபித்தாராம். இரண்டாவது நாளே அவர் எதையெல்லாம் கேட்டாரோ அவைகள் யாவும் கிடைத்தன என்று தன் சாட்சியில் கூறியதை **மோகன் C. லாசரஸ்** கேட்டு உடனே தானும் தன் ஜெப முறையை மாற்றி **பால் யாங்கிசோ முறையை** பின்பற்றி தனக்கு வேண்டியதையும் அதன் விவரங்களையும் தெளிவாக ஒரு பேப்பரில் எழுதி ஜெபித்தாராம். மறு வாரமே ஜெபித்த அத்தனை காரியங்களும் கிடைத்தன என்று கூறி **என் அனுபவத்தை நீங்களும் பின்பற்றி ஜெபியுங்கள்.** ஜெபத்துக்கு பதில் நிச்சயம் கிடைக்கும் என்று கூறினார்.

**இது எத்தனை முட்டாள்தானமான ஜெபம் தெரியுமா?** மூளை உள்ளவர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். தயவுசெய்து **சத்தியம்** TVயில் சகோ. மோகன் C.லாசரஸ் அவர்களின் **வாங்க ஜெபிக்கலா**ம் நிகழ்ச்சயில் கூறும் இப்படிப்பட்ட **முட்டாள்தனமான ஜெபத்தை** செய்யாதீர்கள். நம்முடைய தெய்வம் **நம்மையும்** நம் **உள்ளத்தின் நினைவுகளையும் அறியும்** தெய்வம் என்று நம் வேத புஸ்தகம் விளக்குகிறது. மேலும் இயேசு கூறினார். நீங்கள் **வேண்டிக்கொள்வதற்கு முன்பே உங்களுக்கு இன்னது தேவை** என்று கர்த்தர் அறிந்திருக்கிறார் என்று கூறினார். அப்படியிருக்க மேஜை – நாற்காலி **நீளம் அகலம்** என்ன **ஜாதி மரம்** என்பவைகளை கூறினால்தான் இயேசு

ஜெபத்துக்கு பதில் கொடுப்பாரா? நீங்களே யோசியுங்கள். சைக்கிள் **எந்த கம்பெனி** என்று குறிப்பிட்டால் தான் ஊழியத்துக்கு கர்த்தர் **சைக்கிள் கொடுப்பாரா?**

தயவுசெய்து மோகன் C. லாசரஸ் **வாங்க ஜெபிக்கலாம்** நிகழ்ச்சியில் கூறும் **ஜெப ஆலோசனையை** கேட்காதீர்கள். உங்களுக்கு பைத்தியம் பிடித்துவிடும்.

இதைக்குறித்து பல வருடங்களுககு முன்பே ஜாமக்காரனில் பால் யாங்கிசோவின் ஜெபத்தை **பின்பற்ற வேண்டாம்** என்று நான் எழுதியிருக்கிறேன்.

**பால் யாங்கிக்சோ** அவர்கள் எழுதிய Fourth Dimension என்ற புத்தகம் முழுவதும் **புதிய ஜெப உபதேசங்ளை பைத்தியக்காரன்**போல் எழுதி முழு உலக கிறிஸ்தவ ஊழியர்களின் கண்டனத்துக்கு உள்ளானார்.

அந்த புத்தகத்தை நானும் வாங்கி படித்தேன். அதில் அவர் தன் உபதேசத்தை உறுதி படுத்த மேலும் ஒரு உதாரணத்தை எழுதியுள்ளார். **தன் சபையில்** ஒரு பெண் வயது 33 ஆகியும் திருமணம் நடக்கவில்லை. ஏன் பாஸ்டர் நான் இரட்சிக்கபட்டவள்தானே ஏன் எனக்கு திருமணம் நடக்கவில்லை என்று கேட்டாள். அப்போது இயேசு தனக்கு கூறிய ஆலோசனை ஞாபகத்தில் வர உடனே அந்த பெண்ணிடம் உனக்கு வரவேண்டிய கணவர் எப்படியிருக்க வேண்டும், நெட்டையா? குட்டையா? கருப்பா? வெள்ளையா? தலை முடி சுரள் சுருளாக இருக்க வேண்டுமா? அல்லது கோரை முடி போல் வணங்காமுடியாக இருக்க வேண்டுமா என்பதை ஒரு பேப்பரில் வரைந்து அதன் மேல் கைவைத்து ஜெபி என்று ஆலோசனை கொடுத்தேன். அதன்படியே அவள் ஜெபித்தாள் மறுமாதமே அவள் திருமணம் நடந்தது எங்கள் சபையில் சாட்சி கூறினாள் என்று எழுதியிருந்தார்.

ஒரு வேளை படம் வரைய தெரியாத ஒரு பெண் தனக்கு வரவேண்டிய கணவர் எப்படியிருக்க வேண்டும் என்று வரைந்து கை வைத்து ஜெபித்த உடனே அவளுக்கு கணவர் கிடைத்துவிட்டார். ஆனால் அவளுக்கு திருப்தி ஏற்படவில்லை தனக்கு கிடைத்த கணவர் மூக்கு சப்பை மூக்கு என்று சொல்லி அழுதாள் என்று வைத்துககொள்ளுங்கள். உடனே **பால் யாங்கிசோவின் கர்த்தர்** என்ன சொல்லியிருப்பார். **நீ வரைந்த படத்தை பார்** என்பார் உடனே அவள் என்ன சொல்வாள் ! கர்த்தாவே எனக்கு படம் வரைய தெரியாது. அதனால் நான் வரைந்த படத்தில் **மூக்கு சப்பையாக** வரைந்துவிட்டேன் என்று அழுதிருப்பாள். இனி அழுது பிரயோஜனமில்லை. அந்த **சப்பை மூக்கைதான்** அனுபவித்து தீரவேண்டும் என்று ஆண்டவர் கூறியிருப்பார் என்றா நினைக்கிறீர்கள் ? இல்லவே இல்லை.

நம் தேவன் மிகவும் நல்லவர், **நீங்கள் ஜெபிக்க வேண்டியது இன்னது என்று அறியாதிருக்கிறீர்கள்** என்று கூறுகிறார். நாம் தவறானதை கேட்டால்கூட அதை தடுத்து **நமக்கு நல்லதைத்தானே** கொடுப்பார். அப்படியிருக்க ஜெபத்தைப்பற்றி இப்படிப்பட்ட **முட்டாள்தனமான** ஆலோசனைகளை **சகோ. மோகன் சி. லாசரலஸ்** கூறுவதை தயவுசெய்து கேட்டு கீழ்படிந்து விடாதீர்கள். இவர்கள் ஆராதிப்பது **வேறொரு இயேசுவை** அவர்கள் பெற்றது **வேறு ஆவி ஆகும்.** அதனால்தான் இப்படிப்பட்ட தவறான ஜெப வழியை சத்தியம் TV பார்ப்பவர்களுக்கு சொல்லி கொடுக்கிறார். ஜாக்கிறதை !

தவறான ஆவி இவரை வழி நடத்துவதால்தான் பால் யாங்கிசோ **சபை காணிக்கைகளை** வாங்கி ஷேர் மார்கெட்டில் போட்டு **லாபம் சம்பாதித்து** மற்றொரு வங்கியில் தன்னுடைய தனி கணக்கில் அந்த பணத்தை சேர்த்ததால்தான் **சபை மக்களே** அவரை அரசாங்கத்திடம் பிடித்துகொடுத்து **ஜெயிலில் தள்ளிவிட்டார்கள்**. அவர் ஆராதித்தவர் **வேறொரு இயேசுவை** என வேதம் குறிப்பிடுகிறது. பெற்ற ஆவி, அதுவும் **வேறு ஆவி** ஆகும்.

பால் தினகரனும் மோகன் சி. லாசரஸ்சும் கொரியா பாஸ்டரை வழி நடத்தின வேதம் எச்சரித்த வேறொரு இயேசுவையும் வேறு ஆவியையும் பின்பற்றி **அன்னிய பாஷை** என்ற பெயரில் மணிக்கணக்காக ஜெபித்தது **வேறொரு இயேசுவுடன்** என்பது விளங்குகிறதல்லவா? இப்படி **சபை காணிக்கை** பணத்தை **வியாபாரத்தில் செலவிட்ட** அவரைத்தான் மோகன் C. லாசரஸ் பின்பற்றி அவர் ஆலோசனையைத்தான் **வாங்க ஜெபிக்கலாம்** நிகழ்ச்சியில் TVயை பார்க்கும் உங்களைப்போன்ற ஏமாளிகளுக்கு அறிமுகப்படுத்தி ஆலோசனையாக கூறியிருக்கிறார்.

**பால் யாங்கிசோ**வை போலவே **இயேசு அழைக்கிறார்** ஊழியத்துக்கு **இளம் பங்காளர்** திட்டத்துக்கு அனுப்பிய **காணிக்கைகளை** எல்லாம் **தங்க கட்டிகளாக** மாற்றி – **128 கோடிகளை** கெஸ்ட் ரூமில் பதுக்கின **பால் தினகரனைத்தான் தெய்வ தாசன்** என்று சத்தியம் TVயில் **மோகன் C. லாசரஸ்** தன் நிகழ்ச்சியினை பார்ப்பவர்களுக்கு அறிமுகப்படுத்தி மறுபடியும் **இயேசு அழைக்கிறார் ஊழியம்** மூலம் மக்களை ஏமாற்றி **காணிக்கை சேர்த்து தங்க கட்டிகளாக மாற்ற** மோகன் C. லாசரஸ் **பால் தினகரனுக்கு** மிகவும் உதவி செய்கிறார்.

ஜாமக்காரன் என்ற முறையில் வாசகர்களை எச்சரிக்கிறேன். சத்தியம் TV யில் **வாங்க ஜெபிக்கலாம், 10 நாள் உபவாச ஜெப நிகழ்ச்சி** போன்ற பல நிகழ்ச்சிகளை மோகன் C.லாசரஸ் நடத்திக்கொண்டிருப்பதை பார்க்கும் நபர்கள் ஜாக்கிறதை! இவர்கள் யாவரும் வேதம் எச்சரிக்கும் **வேறொரு இயேசுவை ஆராதிப்பவர்கள்.** வேறொரு **ஆவியை பெற்றவர்கள்** ஆகும். மிகவும் எச்சரிக்கையாக இருங்கள்.

## ONLINE BANKING (NEFT)

**Dr. M.G.E. PUSHPARAJ**, **SALEM - 636 005. INDIA**

**STATE BANK OF INDIA** (SALEM-1970)

| | |
|---|---|
| **A/C No: 10764116842** | SWIFT CODE - SBININBB637- 10764116842 |
| | IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 |

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

| | |
|---|---|
| **A/C No: 1219101013622.** | SWIFT CODE - CNRB0001219 -1219101013622. |
| | IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. |

# கேள்வி? பதில்!

**கேள்வி :–** சகோ. பால் தினகரன் (இயேசு அழைக்கிறார்) அவர்கள் ஜெபிக்கும்போது இயேசுவே **உம்முடைய ஜீவனை** வியாதிப்பட்ட அந்த தம்பிமேல், அந்த பெண்ணின்மேல் இற்றக்கும் என்று **பல்லை கடித்துக்கொண்டு** சொல்லுகிறாரே அதன் காரணம் என்ன? அவர் மனைவியும் அதே போல் இயேசுவே உம்முடைய **ஜீவனை** அந்த சகோதரி மீது இறக்கும் என்று ஜெபிக்கிறார். ஆனால் இப்படி இதுவரை எந்த ஊழியனும் **ஜீவனை இறக்கும்** என்று ஜெபித்துக் கேட்டதில்லை. இந்த ஜெப முறை சரியா?

**பதில்** :- வருமானவரித் துறையிடம் 128 ***கோடி பணம்***, **5 கிலோ தங்கம்** பிடிபட்ட இப்படிப்பட்ட செய்தி மூலம் **இயேசுஅழைக்கிறார்** ஊழியத்துக்கே **பாதிப்பு ஏற்பட்டதை** அறிந்தபின் இவர்களைக் குறித்த கேள்விகள் அதிகமாக என்னிடம் குவிகின்றன.

ஏற்கனவே இயேசு கிறிஸ்து **தன் ஜீவனை** பிதாவினிடத்தில் சிலுவையில் ஒப்படைத்தார். இப்போது **இயேசு அழைக்கிறார்** குடும்பம் இயேசுவின் **ஜீவனை** இவர்கள் **ஜெபத்தில் பெயர்** அழைக்கும் தவறான **ஜெபத்தின்** மூலம், **பண ஆசையின் மூலம்,** பணமும், **தங்க கட்டிகளும்,** அரசாங்கத்திடம் பிடிபட்ட **சாட்சிகெட்ட அந்த செயலின்** மூலம் திரும்ப திரும்ப **இயேசுவின் ஜீவனை சித்திரவதை** படுத்தியிருக்கிறார்கள். **யார்அவர்களிடம் விளக்கம் கேட்பது? கணவன்** வழி எப்படியோ மனைவியின் வழியும், **பிள்ளைகளின்** வழியும் அப்படியே ! இவர்கள் இயேசுவின் **ஜீவனை** எடுக்கிறவர்கள். அவர்களின் ஜெபம் மிகத் தவறான ஜெபம் ஆகும்.

## கொரோனா

**கேள்வி** : இந்த கொடுமையான **கொரோனா கிருமியின் ஆட்டம்** எப்போது அடங்கும் ?

**பதில்:– உலக மருத்துவ அறிக்கை** ஒன்று இப்படி அறிவிக்கிறது. முழு உலக நாடுகள் ஒவ்வொன்றிலும் 70% மக்களுக்கு கொரோனா **தடுப்பூசி போட்டு முடித்துவிட்டால்** முழு சமூக தொற்று நோய் கிருமியின் **தடுப்பாற்றல் கிடைத்துவிடும்.** அதன்பின் ஒருவரிடமிருந்து அடுத்தவருக்கு **தொற்று நோய்** கிருமியின் **சமூகப் பரவல் நின்றுவிடும்.** அப்போது மட்டுமே **உலக சுகாதார நிறுவனம்** கொரோனா **தொற்று ஒழிந்துவிட்டதாக அறிவிக்கும்.** அதன்பின்தான் **கொரோனா இல்லாத உலகம்** என்று நாம் தைரியமாக **வெளி உலகில்** உலாவ முடியும்.

இப்படிப்பட்ட **நல்ல செய்தி** கேட்க இன்னும் **சில ஆண்டுகள்** வரை நாம் காத்திருக்க வேண்டும். **இப்போதைய சூழ்நிலையில்** உலகில் **வளர்ந்த** நாடுகளில் அல்லது **வளர்ந்து கொண்டிருக்கும்** நாடுகளும்தான் **கொரோனா தடுப்பூசி** போடுவதற்கு முந்திக் கொண்டுள்ளன.

ஆனால் **நூற்றுக்கு** மேற்பட்ட **ஏழை நாடுகள்** இலவசமாகவோ **சலுகை விலையிலோ கொரோனா** தடுப்பூசிகளை பெறுவதற்கு (GAVI) **கேவி** என்ற அமைப்பையும், **உலக சுகாதார நிறுவனத்தையும்** எதிர்நோக்கியுள்ளன. இந்த குறிப்பிட்ட **ஏழை நாட்டு மக்களுக்கு** தடுப்பூசி போடப்பட்டால்தான் உலகம் முழுவதிலும் **சமூக நோய் தடுப்பாற்றலுக்கு** வாய்ப்புண்டு. அப்படி அல்லவென்றால் **வசதியுள்ள** நாடுகளில் கோரோனா **தொற்று நீங்கி போனாலும்** தடுப்பூசி போடாத **ஏழை நாடுகளிலிருந்து மறுபடியும் அந்த கிருமி** உலகம் முழுவதும் **பரவ வாய்புண்டு.** இது மிக மிக பயங்கர கிருமியாகும்.

**தடுப்பூசி உலகம் அனைத்திலும்** போட்டுக்கொண்டாலும் **முக கவசம்** தொடர்ந்து **உபயோகிப்பது நல்லது.** அதை நாம் **பழக்கப்படுத்திக்கொண்டால்** (TB) **காசநோய்** போன்ற மற்ற தொற்றுகளிலிருந்தும் நாம் காப்பாற்றப்படலாம். அப்படியே ஒருவர் **தும்மினால்** அந்த இடத்திலுள்ள அனைவருக்கும் **ஜலதோஷம்** போன்ற சாதாரண வியாதிகளும் மற்றவர்களுக்கு **தொற்றிக்கொள்ளும்.** அதேபோல் **தனி மனித** இடைவெளியை காப்பதும், **கைகளை சுத்தமாக** அடிக்கடி கழுவுவதும் வழக்கமாக்கி கொள்ள வேண்டும். அப்படி அல்லவென்றால் **இலவசமாய் பெற்றீர்கள் இலவசமாய் கொடுங்கள்** என்ற வசனத்தின்படி வீட்டில் உள்ள அனைவருக்கும் ஜலதோஷம் ஒரு ரவுண்ட் சந்தித்து விலகும். அதுபோலத்தான் மற்ற தொற்று கிருமிகளும் பறவும். தும்மும்போது ஒரு கைக்குட்டை மூக்கில்வைத்து தும்முங்கள்.

ஆகவே நான் கூற விரும்புவது என்னவென்றால் இந்த **கொரோனா தொற்று** ஒரு வருடம் அல்லது **3 வருடத்தில் நீங்க கூடியதல்ல.** இப்போததைக்கு அது சாத்தியப்படாது. நான் கூறுவது **தீர்க்கதரிசனமல்ல,** Zoom வழியாக, நெட் வழியாக, வாட்ஸ்ஆப் வழியாக, TV வழியாக நல்ல செய்திகளை, **நல்ல ஆராதனைகளை** கேளுங்கள் ஆலயத்துக்கு சென்று அல்லது சபைக்கு சென்று ஆராதனையில் கலந்துகொள்வதுபோல் அச்சடக்கத்தோடு வீட்டிலேயே பங்கு பெறுங்கள். சபைக்கு போக வழி உண்டானால் சபைக்கு போவதுதான் மிகவும் நல்லது.

**கேள்வி :–** இந்த கொரோனா தொற்று காலத்தில் எங்கள் சபை **ஆயர்** பெரிய **பாத்திரத்தில்** திருவிருந்தை **வாய் வைத்து** குடிக்கும்படி கட்டாயப்படுத்துகிறார்கள். நானும் இன்னும் இருவரும் **ஆயரிடம்** ஐயா Individual **தனி தனி சிறிய பிளாஸ்டிக் கப்புகளில்** திருவிருந்து கொடுத்தால் கொரோனா தொற்று பரவாமல் இருக்கமே என்றோம். ஆனால்

அவரோ எங்களோடு எடுத்தெரிஞ்சி பேசிவிட்டார். உங்களுக்கு **இஷ்டம் இருந்தால்** பங்குகொள்ளுங்கள். இல்லாவிட்டால் **பங்கு கொள்ளவேண்டாம்.** என்று கூறிவிட்டார். எங்கள் சபை சட்டப்படி **வருடத்துக்கு 3 முறை திருவிருந்து** எடுக்காவிட்டால் **ஓட்டு போடும்** உரிமை கிடையாது. **ஓட்டே போட வேண்டாம்** என்று இருந்தாலும் சபையில் பல முக்கிய விஷயங்களுக்கு நீங்கள் ஒழுங்காக **திருவிருந்து** எடுக்கிறவரா? என்று அவர்கள் கேட்கும் கேள்விக்கு சரியான பதில் இல்லாவிட்டால் சலுகைகள் எதுவும் கிடைக்காது. கல்லறை கிடைக்காது **கலியாணம் ந**டத்த தடைசெய்ய எங்கள் சபையில் பலர் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். CMC போன்ற மெடிக்கல் கல்லூரி செல்ல ஆயர் சிபாரிசு செய்ய மாட்டார் என்ன செய்ய டாக்டர் ஐயா ?

**பதில் :–** நீளமான கேள்விக்கு சுருக்கமான பதில் இதுதான் நீங்கள் மேலே கூறியபடி உங்கள் **ஆயர்** கூறியிருந்தால் **அவர் ஆவிக்குரிய ஆயர் அல்ல,** அல்லது சபையில் **சில பழமை விரும்பிகள்,** வயதானவர்கள் சிலர் இருப்பார்கள். அவர்களுக்கு ஆயர் பயப்படுக்கிறார் என்று அர்த்தம்.

இப்போது **மத்திய அரசு** வெளியிட்டுள்ள ஆணையின்படி ஒரே பாத்திரத்தில் வாய் வைத்து திருவிருந்து குடித்தால் உங்கள் **ஆயரை கைது செய்ய நேரிடும்.** ஆலயத்தை **சீல் வைத்து** ஆராதனையே **நடத்த முடியாதபடி** செய்துவிடுவார்கள். இது **கொரோனா காலம்** என்பதை உங்கள் ஆயருக்கும், **கமிட்டிக்கும் ஞாபகப்படுத்துங்கள்.** ஒரே ஒரு பெட்டிஷன் எழுதிபோட்டால் போதும் அடுத்த வாரமே உங்கள் ஆலயத்தை சீல் வைத்து வைத்து மூடிவிடுவார்கள். கர்த்தருக்கும் **வேத வசனத்துக்கும்** இவர்கள் பயப்படாமல் போனாலும் **கொரோனா பயம்** கூட உங்கள் சபை **ஆயருக்கு** இல்லாமல் போனதேன்? கொரோனா பரவும் வழியே மூக்கு, வாய் வழியாகத்தான். அதனால்தானே முகக் கவசம் அனிய கட்டாயப்படுத்துகிறார்கள். **கொரோனா தொற்று** உள்ளவர் **வாய் வைத்து** குடித்ததை, மற்றவர் வாய் வைத்து குடித்தால் போதும் உடனே நீங்கள் **கொரோனா வியாதிபஸ்தராகிவிடுவீர்கள் ஜாக்கிறதை.!**

ஆனானபட்ட TPM (CPM) சபையினரே **தனி தனி கப்புக்**கு மாறிவிட்டனர். விவரம் அறியாத பல **TPM சபையினர்** பழைய பிடிவாதத்தில் **ஒரே பாத்திரத்தை** உபயோகிக்கிறார்கள். உங்கள் TPM சபைக்கு இன்னும் **சுகாதார அதிகாரிகள்** செல்லவில்லை போலிருக்கிறது. சுகாதார அதிகாரிகள் இஸ்லாமியர் மசூதிக்கு பார்வையிட வருகிறார்கள். தொழுகை முடிந்தவுடன் ஒருவருக்கொருவர் கட்டிபிடித்து வாழ்த்து கூறுவார்கள். அப்படி செய்யக்கூடாது அதற்கு பதில் இரண்டு கைகளை விரித்து மற்றவர் கைகளக்கு நேராக காட்டினால் போதும். கைகளை தொடக்கூடாது.

அப்படியே கிறிஸ்தவர்களுக்கும் சமூக இடைவெளிவிட்டு உட்கார்ந்து இருக்கிறார்களா என்பதையும், கூடி நின்று பேசக்கூடாது என்பதையும் கவணிக்கிறார்கள். குறிப்பாக

திருவிருந்து ஒரே பாத்திரத்தில் சட்டத்தை மீறி பருகுகிறார்களா என்பதையும் கவனிக்கிறார்கள். ஜாக்கிறதை. மாட்டிக்கொள்ளாதீர்கள். காவி படைகளும் சபையை சீல்வைக்க காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு நாமே இடம் கொடாதபடி பார்த்துக்கொள்வோம்.

திருவிருந்தின் **மைய நோக்கத்தை** விளங்கிப்கொண்டால் இந்த பிரச்சனை உண்டாகாது. 1 கொரி 11:28ன்படி அவனவன் **தன்னைத்தான் சோதித்தறிந்து** இதுலே பாணம் பன்னக்கடவன் என்று கட்டளையிடப்படிருக்கிறது, கொடுக்கிறது யார், பக்கத்தில் எந்த ஜாதிக்காரன் திருவிருந்து எடுக்கிறான். பெரிய **கப்பா** ? சிறிய **கப்புகளா** என்பது முக்கியமல்ல திருவிருந்தின் நோக்கத்தை புரிந்துகொள்ளுங்கள்.

**கேள்வி :** ஆவிக்குரிய கூட்டத்தில் அல்லது ஆராதனையில் அவரவரர்களை அவரவர் தலைமீது கை வைத்து ஜெபியுங்கள். இப்போது வல்லமை இறங்கும் என்கிறார்கள். இது சரியான முறையா?

**பதில் :** – உங்கள் கைகளை உங்கள் தலைமீது வைத்து ஜெபிக்க வேதத்தில் பழைய ஏற்பாடு அல்லது புதிய ஏற்பாடு ஆகிய எதிலாவது அப்படிப்பட்ட சம்பவத்தை வாசித்திருக்கிறீர்களா?

ஊழியக்காரர்கள் மற்றவர் தலைமீது கை வைப்பதே மிகவும் ஆபத்தான விஷயம். தகுதியில்லாமல் மற்றவர் தலைமீது கைகளை வைத்து ஜெபிக்கக்கூடாது. பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது 1 தீமோ 5:22 ஒருவன் மீதும் சீக்கிரமாய் கைகளை வையாதே, மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே, உன்னை சுத்தவானாக காத்துகொள் என்கிறார்.

ஊழியக்காரர் கைகளை மற்றவர் தலைமீது தகுதியில்லாமல் தன்னை **பரிசுத்தம் செய்துகொள்ளாமல்** கை வைப்பதே ஆபத்து என்று பவுல் கூறுகிறார். அப்படி தகுதியில்லாமல் கை வைத்து ஜெபித்தால் அந்த நபரில் உள்ள அசுத்த ஆவிகள் தகுதியில்லாமல் கை வைக்கும் ஊழியக்காரனின் உள்ளே பிரவேசிக்கும், ஜாக்கிறதை ! **ஆயர்** ஆனாலும் சரி, **பிஷப்** ஆனாலும் சரி, சுகமளிக்கும் வரம் உள்ளவர்களானாலும் சரி, தகுதியில்லாமல் கை வைத்தால் அதன் விளைவை அவர்கள் அனுபவிக்க வேண்டிவரும். அப்படியிருக்க நீங்கள் எத்தனை பெரிய விசுவாசியானாலும் **உங்கள் தலையில் நீங்களே கை வைத்து ஜெபிக்காதீர்கள்.** அது வசன அடிப்படையல்ல. சாதாரணமாக **கை கூப்பி** கர்த்தரிடம் ஜெபியுங்கள் அது போதும், கைகளை **வானத்தை நோக்கி உயர்த்தியும்** ஜெபிக்க வேண்டிய அவசியம் இல்லை. முன்பு பரமண்டலங்களில்



வாசம்செய்யும் தெய்வமாய் இருந்தவர். இப்போது உங்கள் இருதயத்திலேயே **இம்மானுவேலாராய்** உள்ளத்தில் வாசம் செய்யும்போது **கைகளை உயர்த்திதான்** ஜெபிக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை. சில சபை பாஸ்டர்கள் அப்படி பழக்கப்படுத்திவிடுகிறார்கள். தாங்கள் சொன்னால் சபை மக்கள் கீழ்படிகிறார்களா என்பதை அறிய அவர்கள் ஆசைப் படுகிறார்கள். **பாஸ்டர் D. மோகன்** அவர்களின் AG சபைக்கு போனால் ஒரு நிமிடத்தக்கு ஒருமுறை **கை தூக்கி அல்லேலுயா சொல்ல** சொல்லுவார். ஏதோ ஒருமுறை அல்லது இரண்டு முறை முக்கியமான வசன விளக்கம் ஆவியானவர் பாஸ்டர் மூலம் கொடுத்தால் அது உங்கள் உள்ளத்தை தொட்டால் பாஸ்டர் கட்டளையிடாமலே, உங்களையரியாமல் தேவனை கை உயர்த்தி மகிமைப்படுத்துவீர்கள். சில சமயம் உங்களை அறியாமலேயே வாய் திறந்து ஸ்தோத்திரம் ஆண்டவரே வசனத்தின் மூலம் உணர்த்தியதற்கு நன்றி என்று வாய் நிறைய கூறுவீர்கள்.

ஆனால் **பாஸ்டர் மோகன்** போன்றவர்கள் **டிரில் மாஸ்டர்போல** சபைகளை ஒவ்வொரு நிமிஷத்துக்கும் **கை உயர்த்தி அல்லேலுயா** கூற கட்டளையிடுவது சபை மக்களுக்கு **சலிப்பை** உண்டாக்கும் எப்படியோ பழகிவிட்டார்கள் அவர்களால் திருந்தமுடியாது.

- அதைப்போலவே கூட்டத்திலோ, ஆராதனையிலோ **வியாதி உள்ள இடங்களில்** கை வைத்து ஜெபியுங்கள் என்று சில ஊழியர்கள் கட்டளையிடுவார்கள். கை வைக்கும் இடத்தில் உள்ள வியாதிகள் ஊழியர்கள் ஜெபிக்கும்போது வல்மை **கை வழியாக** இறங்கி அந்த வியாதியுள்ள பாகத்தை சுகப்படுத்தும் என்பது இவர்களின் தவறான உபதேசம்.

வேதத்தில் ஆண்டவர் கை வைத்து ஊமையும் செவிடனுமான ஆவியே இந்த சரீரத்தை விட்டு வெளியே போ என்று விரட்டினார். மற்ற சீஷர்கள் கை பிடித்து தூக்கிவிட்டு அதன் மூலம் அவர்கள் சுகம் பெற்றார்கள்.

ஆனால் யாரும் அவரவர் கைகளை அவரவர் சரீரத்தில் **வியாதி உள்ள இடத்தில்** கை வைக்க சொன்னதாக வேதத்தில் எங்கும் இல்லை. இப்போது நவீன காலத்தில் ஜெப நேரத்தில் வீடியோ எடுக்கிறார்கள், ஆபாசமான இடத்தில் வியாதியுள்ள ஒரு பெண்னோ ஆனோ கை வைத்தால் அதை வீடியோ எடுத்து TVயில் வெளியிடுகிறார்கள் சிலர் அந்த வீடியோவை வாங்கி மற்றவர் பார்க்க கொடுத்தால் அது எத்தனை **வக்கிரம்** எத்தனை **அசிங்கம்.** வீடியோ எடுக்காமலே ஜெப நேரத்தில் பல வாலிபர்கள் யார் யார் எங்கெங்கு கை வைக்கிறார்கள் என்பதை பார்த்து ரசிக்க இடம் வகுக்குமே. ஆகவே எந்த ஊழியரும் தயவுசெய்து அந்த முறையை ஜெபத்தில் கடைபிடிக்காதீர்கள். பெரும்பாடுள்ள ஸ்திரி, உதிரபோக்கினால் கஷ்டப்பட்டவள். தீட்டாக கருதப்பட்டவள் இயேசுவின் வஸ்திரத்தின் தொங்கல்களை தொட்டாள் அந்த வினாடியே உதிரம் நின்றது. உதிரம் வரும் இடத்தை அவள் தொடவில்லை.

ஆகவே சில ஊழியர்கள் வியாதியுள்ள இடங்களில் அவரவர்களே கை வைத்தால் பாதிக்கப்பட்டவருக்கு உண்டாகும் அவமானம், அதன்பின் உண்டாகும் பின்விளைவுகளையும் குறித்து யோசித்து பார்ப்பதில்லை. கேள்வி கேட்டவர்களுக்கு விளக்கம் போதுமானதாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

# கர்த்தருக்குள் மரித்தார்



சகோ. Hariharan Harris (வயது 62) சென்னை அவர்கள் 2020 அக்டோபர் 8ம் தேதி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். Cross Blood Foundation என்ற பெயரில் எந்த நோயாளிக்கு கடைசி நேரத்தில் எந்த **குரூப் இரத்தம் தேவையோ** அதன் விவரத்தை சகோ. ஹரி அவர்களுக்கு தெரிவிப்பார்கள். குறிப்பாக கேன்ஸர் வியாதிக்கு பலவித குரூப் இரத்தம் தேவைப்படும். அந்த குறிப்பிட்ட **குரூப் இரத்தம்** யாரிடம் இருக்கிறது என்பதை அறிந்து அந்த நபர் (டோனர்) யார் என்பதை கண்டுபிடித்து அவருடைய இரத்தத்தை வாங்க ஏற்பாடு செய்து உடனே சப்ளை செய்வது இவர் ஊழியம் ஆகும். இவர் மூலமாக இரத்தம் பெற்று உயிர் பிழைத்தவர்கள் நிறைய பேர். குறிப்பாக குழந்தைகளுக்கும், சிறு பிள்ளைகளுக்கு உண்டாகும் **லுக்குமியா** என்ற இரத்தப் புற்றுக்கு நிறைய இரத்தம் அடிக்கடி தேவைப்படும். அப்படிப்பட்ட இரத்தத்தை **ஏழை மக்கள்** முதல் **பணக்காரர், படித்தவர்கள்** வரை பலர் **இரத்த தானம்** செய்ய இவரிடம் தங்கள் **தொலைபேசி** எண்ணை கொடுத்திருப்பார்கள். சில ஏழை தொழிலாளர்கள் தங்கள் இரத்தத்தை விலைக்கு கொடுப்பார்கள். அதை அப்படியே உரியவர்களுக்கு கொடுத்து அப்படியே **ஊழியமும் செய்வார்.**

ஒரு முறை இவர் **கிறிஸ்மஸ் விழா** என்று ஒரு ஏற்பாட்டை சென்னை **எக்மோரில்** உள்ள Children Hospitalலில் கேன்சர் பிளளைகள் வார்டுக்கு அருகே ஒரு நீண்ட அறையில் **இரத்தம் பெற்று சுகமானவர்களையும்** இரத்தம் **கொடுத்த பல்வேறு மதத்தினரையும்** அழைத்து விசேஷ **தேனீர் விருந்துக்கு ஏற்பாடு செய்து** அவர்களுக்கு **சுவிசேஷம் கூறவும்** ஜெபிக்கவும் Dr. புஷ்பராஜ் ஆகிய என்னை அழைத்திருந்தார். அங்கு **இரத்தம் கிடைக்கப்பெற்று** சுகமானவர்களின் சாட்சி பகிர்ந்துகொள்ளப்பட்டது. **இரத்தம் கொடுத்தவர்கள்** அவர்களை நேரில் உயிரோடு இருப்பதை கண்டு புதுவித உற்சாகம் அடைந்தனர்.

நான் **இயேசுவும்** தன் **இரத்தம் கொடுத்து** தான் நம்மை **பாவத்திலிருந்து** காப்பாற்றியதையும் அநத விழாவுக்கு வந்தவர்களில் **இரத்தம் கொடுத்து** அவர்கள் தங்கள் கொடுத்த இரத்தத்தால் பலர் **சுகமாகி உயிரோடு** இருந்து **நன்றி** கூறுவதையும் ஒப்பிட்டு பிரசங்கம் செய்தேன். பலர் தொடப்பட்டார்கள். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

இப்படிப்பட்ட நல்ல சேவைகளை செய்த திரு. HARI அவர்களுக்கு 2019 **அக்டோபர்** மாதம் இருதய அடைப்பு ஏற்பட்டு வலி தாங்கமுடியாத நிலையில் ஆம்புலன்சில் கொண்டுபோகப்பட்டார். அது **கொரேனா தொற்று** மிக அதிகமான காலமானபடியால் ஒரு ஆஸ்பத்திரியிலும் இருதய வியாதிக்கு நாங்கள் சிகிச்சை அளிப்பதில்லை என்று கூறி கடத்திவிட்டார்கள். நான்கு ஆஸ்பத்திரிகளுக்கு ஆம்புலன்ஸில் இவரை வைத்து இவர் மனைவி சுற்றிவர நேரம் மிகவும் கடந்துபோனது, கடைசியில் ஒரு ஆஸ்பத்திரியில் அவரை ஏற்றுக்கொண்டு முதல் **உதவி அளிக்க** ICU வார்டுக்கு கொண்டுபோகும் வழியில் சகோதரனின் உயிர் பிரிந்தது. கொஞ்சம் **முன்பதாகவே வந்திருந்தால்** பிழைக்க வைத்திருக்கலாமே என்று டாக்டர்கள் கூறி வருத்தப்பட்டனர். ஆனால் நான்கு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று முடிவில் டிரிட்மென்ட் ஆரம்பிக்க மிக தாமதமாகி போனது.

இத்தனைக்கும் எல்லா ஆஸ்பத்திரியில் பணிபுரிபவர்களுக்கும் மரித்த சகோதரன் இரத்த சேவையை குறித்து நன்றாக அறிவார்கள் என்றாலும் சகோதரன் ஹாரிக்கு உதவிசெய்ய முடியவில்லை என்பது ஹாரி குடும்பத்தினரக்கு அது மிகவும் வேதனையுள்ள சோதனை நேரம் அது. கர்த்தர் தாமே அவர் விட்டு போயிருக்கும் மனைவி – மகன் ஆகியவர்களுக்கு ஆறுதலும், விசுவாசமும் அளிப்பாராக. தம்பி ஹரி அவர்களுடைய வாழ்க்கைக்காக தேவனை துதிக்கிறேன்.


**STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER JAMAKKARAN (FORM IV)**

| | | |
|---|---|---|
| 1. Title of the news paper | : | **JAMAKKARAN** |
| 2. Language(s) in which it is published | : | **TAMIL / MALAYALAM** |
| 3. Place of publication | : | 89,Majeeth Street,<br>Old Suramangalam, Salem - 636 005. |
| 4. Periodicity of its publication | : | Monthly |
| 5. Printer's name | : | M.Velu |
| (whether citizen of India) | : | Indian |
| Address | : | P.M.Press<br>168,Arumuga Nagar, Salem-636 005 |
| 6. Publisher & Editor's name | : | **Dr.M.G.E.PUSHPARAJ** |
| (whether citizen of India) | : | Indian |
| address | | 89,Majeeth Street, Old Suramangalam. Salem-636005 |

I, **Dr. M.G.E.PUSHPARAJ** *hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.*

Dated : April -2021
Salem - 5

**(Sd.) Dr. M.G.E.PUSHPARAJ**
*Signature of Publisher & Editor*



## Dr. Rev. **சாம் கமலேசன்,** B.V.Sc.,Ph.D.B.D., அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு FMPB மிஷனரி ஸ்தாபனத்தின் **ஸ்தாபகர்களில்** ஒருவரும் டேனிஷ்பேட்டை பெத்தேல் விவசாய ஐக்கியத்தின் **ஸ்தாபகர்களில்** ஒருவரும். World Vission ஸ்தாபனத்தின் நீண்டகால **உப தலைவருமான** Dr. சாம் கமலேசன் அவர்கள் தனது 91வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். சகோதரனும் சகோ. P. **சாமுவேல்** அவர்களும் இரட்டையர்கள்போல ஆத்தும ஆதாய பணியில் மிக சிறந்து விளங்கினார்கள். எனக்கு Dr. சாம் கமலேசன் அவர்களோடு அதிகம் நெருக்கம் இல்லை. ஆனால் நாங்கள் இருவரும் ஒன்று இணைந்து பகிர்ந்துகொண்ட நான்கு இடங்கள் உண்டு. அதன் விவரங்கள் வரும் நாட்களில் பகிர்ந்து கொள்வேன்.

Dr. சாம் கமலேசன் மூலமாக உருவாகிய ஊழியர்கள் ஏராளம். அவரின் வாழ்க்கையில் உண்டான நெருக்கங்கள் ஏராளம், பல வேதனையான சூழ்நிலைகளை தாண்டி மீண்டும் புது பெலன்பெற்று எழுந்தது கர்த்தரின் அற்புதம் ஆகும். ICU அறையில் மனைவியை பார்க்கப்போனபோது தரையில் வழுக்கி விழுந்து தலையில் அடிப்பட்டு மூளையில் இரத்த உரைவு ஏற்பட்டு சில நாள் சுய நினைவு இழந்து பின் அநேகரின ஜெபம் அவரை உயிர்பெற்று எழ செய்தது. ஆனால் ஞாபக சக்தி இழந்த நிலை. வாய் பேச முடியாத நிலை, அதிலெல்லாம் ஜெயித்து எழுந்து அமெரிக்காவில் உள்ள சபை பாஸ்டர் அவரை சபையில் ஜெபம் செய்ய வைத்து. பயிற்சி கொடுத்தார். தடுமாறி தடுமாறி ஜெபித்து முடித்துவிட்டார். அந்த குறிப்பிட்ட சபை பாஸ்டரை நான் பாராட்டுகிறேன். அப்படி அவரை பயிற்சி கொடுக்கவில்லையானால் சகோதரனின் ஆசையை நிறைவேற்றியிருக்க முடியாது. நான் பிரசங்கிக்கும் நிலையில் மறுபடியும் **என் இந்தியாவை** நான் சந்திக்க வேண்டும், அங்கு மறுபடியும் பிரசங்கிக்க வேண்டும் என்ற அவரின் வாஞ்ஜை நிறைவேறியிருக்காது. ஞாபகசக்தி பெற்றபின் அவர் இந்தியாவில் பிரசங்கித்தார். சத்திய வசனம் TV நிகழ்ச்சியில் அவர் பிரசங்கித்ததை கண்ட மக்கள் கர்த்தரை துதித்தார்கள். அவர் மரணம் FMPB மிஷனரி ஸ்தாபனத்துக்கு பெரும் நஷ்டமாகும். அவர் வாழ்க்கைக்காக அவரை கர்த்தர் உபயோகித்த நாட்களுக்காக , அவரால் தொடப்பட்ட ஆத்துமாக்களுக்காக தேவனை துதிப்போம். கர்த்தர் அவருக்கு கொடுத்த ஆளுமை, நிர்வாக திறமை யாவற்றுக்காகவும் நாம் தேவனை துதிப்போம்.

**FEBRUARY-2021**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.